# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

## ஆண்டறிக்கை

## 2010

## பொருளடக்கம்


பக்கம்

1. அறிமுகம் 01

2. பின்புலம் 02-05

2.1 நோக்கம்
2.2 செயற்பாடு
2.3 நோக்கங்கள்
2.4 அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை

3. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சுருக்கமான தோற்றப்பாடு 06-14

3.1 நிறுவகம்
3.2 அனர்த்த முகாமைத்துவநிலைய தொழிற்பாடுகள்
3.3 அனர்த்த முகாமைத்துவ நிலையக் கட்டமைப்பு
3.4 அ.மு.நி. அலுவலர்களின் சுருக்கமான தொகுப்பு
3.5 2010ஆம் ஆண்டில் வாய்த்த சந்தர்ப்பங்களும் இடையூறுகளும் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்கள்
3.6 பணியாள் ஆட்சேர்ப்பு
3.7 அ.மு.நி. தின் மீள்கட்டமைப்பு
3.8 அ.மு.நி. அலுவலகம்
3.9 அனர்த்த முகாமைத்துவ சட்ட மறுசீரமைப்பு

4 தேசிய மட்டத்தில் பிரதான செயற்பாடுகள் 14-19

4.1 இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவக்கொள்கை
4.2 கூட்டுத்திட்டம்
4.3 தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம்
4.4 ‘தேசத்துக்கு மகுடம்’ கண்காட்சி
4.5 2010ஆம் ஆண்டின் தேசிய பாதுகாப்புத் தினம்
4.6 ஆலோசனைக் குழுக்கள்
4.7 அனர்த்த ஆபத்துக்களைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுத்தல் தொடர்பான தேசிய மாநாடு (ஊஊஏயு)
4.8 இணையத்தளம்

5. தணிப்பும் தொழில்நுட்பப் பிரிவும 19-31

5.1 அறிமுகம்
5.2 இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ கருத்திட்டங்கள்
5.3 அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் வெள்ளத்தணிப்பு நடவடிக்கைகள்
5.4 கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உயர் மண்சரிவு ஆபத்துள்ள மற்றும் பாறைகள் நிறைந்த பகுதிகளில் மலைச்சாரல்களை ஸ்திரப்படுத்தலும் மண்சரிவைத் தணிப்பதும்.
5.5 வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைப்பு உபாய சுற்றாடல் மதிப்பீடு (ஒ.உ.சு.ம)
5.6 அபாய வாய்ப்பு விபர கருத்திட்டம்
5.7 ஆசியக் காவல் முஜறமை அமுலாக்கல்
5.8 ஐஊவு கொள்கை அ.மு.நி. அமுலாக்கல்

**6. பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வுப் பி ரிவு** **32-36**

6.1 பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வுப் பிரிவு
6.2 விழிப்புணர்வைத் தூண்டும் உபகரணங்களின் அபிவிருத்தி
6.3 நடமாடும் பயிற்சிப் பிரிவு
6.4 எதிர்வரும் பருவமழை காலத்திற்கான தயார்படுத்தல் செயலமர்வுகள
6.5 ''அரச நோய்த்தடுப்புத் தயார்நிலை மற்றும் பதிலிறுப்பு நடவடிக்கைத் திட்டம்'' இதன் ஓர் பகுதியான ''எதிர்பாரா நிகழ்வுகளுக்கான அத்தியாவசிய சேவைகள் மேம்பாட்டை திட்டமிடல்'' பங்குதாரர்களுக்கான கூட்டம்.
6.6 தேசியமட்ட பயிற்சித்திட்டம்
6.7 மாவட்ட முன்னேற்றம்

**7 தயார்படுத்தல், திட்டமிடல் பிரிவு** **37-45**

7.1 அறிமுகம்
7.2 தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை மற்றும் தேசிய அவசர நடவடிக்கைகள் திட்டம்
7.3 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயாரிப்பு
7.4 2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஏனைய கருத்திட்டங்கள்

**8. அவசர நடவடிக்கைகள் நிலையம** **45-51**

8.1 அறிமுகம்
8.2 நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்கள்
8.3 அவசர பதிலிறுப்பு இயலுமையை மேம்படுத்துதல்
8.4 முன்னெச்சரிக்கை நுயசடல றுயசநெiபெ னுளைளநஅiயெவழைெ ஊயியஉவைல ஐஅிசழஎநஅநவெ
8.5 ஏனைய செயற்பாடுகள்

**9. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (ருனூீ) அனர்த்த அபாய முகாமைத்தவத்திற்கான பங்களிப்பு** **51-56**

9.1 அறிமுகம்

9.2 அனர்த்த ஆபத்து மதிப்பீடு
9.3 காலநிலை மாற்றம் தாங்குதிறன் செயற்பாடுகள்
9.4 பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிநிரல்
9.5 2009 இல் தாபிக்கப்பட்ட மெனிக்பாம் கால்வாய் பராமரிப்புத்திட்டம்

**10. இறுதிக் கணக்குகள் 2010 - அனர்த்த முகாமைத்துவ நிலையம்** **59 - 80**

**11. இறுதிக் கணக்குகள் 2010 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய மன்றம்** **81-87**

**12. கணக்காய்வு அறிக்கை** **88-96**

**13. கணக்காய்வு அறிக்கை பற்றிய அவதானங்கள்** **97-105**

**14. சொற் சுருக்கக் குறியீடுகள்** **110**

## வருடாந்த அறிக்கை 2010

### 1. அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் (அ.மு.நி.) இலங்கையிலுள்ள முன்னோடியான அனர்த்த முகாமைத்துவ முகவராகும். இதற்கு பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தவும் தேசிய மற்றும் உபதேசியமட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் பங்குபற்றுதலுடன் அனர்த்த அபாயத்தை குறைப்பதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையின் நிறைவேற்று முகவராக (தே.பே.அ.மு.) அ.மு.நி. தாபிக்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை வழிநடாத்தி அதன் செயற்பாடுகளை நிர்வாகம் செய்யும் அதேவேளையில் தேசிய பேரவைக்கு தேசிய கொள்கைகளையும் உபாய வழிமுறைகளையும் வகுக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டம் இலங்கையில் அனர்த்த அபாயக் குறைப்பு (அ.அ.கு.) முணைப்புகளுக்கு ஓர் வேலைச்சட்டகமாக உருவாகியுள்ளதுடன் அனர்த்த முகாமைத்தவத்தை வழிநடத்திக்கொண்டு பதிலிறுப்பு சார் பொறிமுறையிலிருந்து முன்னேற்பாட்டு அணுகுமுறைக்கு இட்டுச் செல்லும் ஓர் கொள்கை மாற்றத்திற்கு இட்டுச் செல்கின்றது. இச்சட்டத்தின் எல்லைக்குள் இருபத்தொரு (21) ஆபத்துக்கள் வருகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் (அ.மு.நி.) பிரதான செயற்பாடுகளாவன: அனர்த்தத் தணிப்பு, தயார்நிலையிலிருத்தல், பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளுக்கு முன்னெச்சரிக்கைகளை பரப்புதல், அவசரகால நிலை செயற்பாடுகள், ஏனைய பிரதான முகவர்களின் ஒத்துழைப்புடன் நிவாரண மற்றும் அனர்த்தத்திற்கு பின்னரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தல் ஆகியவையாகும்.

அ.மு.நி. செயற்பாடுகளுக்கு அனுசரணை வழங்கும் முகமாக அனைத்து மாவட்டங்களிலும் உபதேசிய மட்ட மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் (மா.அ.மு.ஒ.அ) ஒருங்கிணைப்பதற்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவையாளர் பிரிவு மட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் தாபிக்கப்பட்டன.

## 2. பின்புலம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் (அ.மு.நி.) ஐந்து வருடங்களின் பின்னர் அனர்த்தம் சார் செயற்பாடுகளை தேசியப் பிரச்சினை மாற்றுதல் தனது வகிபாத்திரத்தை சிறப்பாக வழிநடாத்தியுள்ளது.

2010ஆம் ஆண்டில் வெள்ளம், மண்சரிவு, சூறாவளி, சுனாமி மற்றும் ஏனைய அனர்த்த ஆபத்துக்களுக்கு உட்படக்கூடிய பிரதேசங்களில் தயார்நிலை மற்றும் அவசரநிலை பதிலிறுப்பு செயற்பாடுகளை ஸ்திரப்படுத்தும் முகமாக கிராம சேவகர் மட்ட சனசமூகமட்ட தன்னார்வ குழுக்கள் பல தாபிக்கப்பட்டன. மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்டதுவ குழுக்கள் மூலமாக மூலமாக நாடுபூராகவும் அனர்த்த ஆபத்து குறைப்பு (அ.ஆ.கு) நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரசு சாரா முகவர்களின் ஒத்துழைப்புடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் (மா.அ.மு.ஒ.அ.) அனைத்து உப தேசிய மட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் படி பின்வரும் அபாயங்கள் அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ் வருகின்றன:

1. மண்சரிவு
2. சூறாவளி
3. வெள்ளம்
4. வரட்சி
5. கைதொழில்சார் ஆபத்துக்கள்
6. சுனாமி
7. நிலநடுக்கம்
8. வளிமண்டல ஆபத்துக்கள்
9. கடற்கரைசார் ஆபத்துக்கள்
10. தீ
11. கொடிய நோய் பரவல்
12. வெடிப்புக்கள்
13. சுற்றிவளைப்புக்கள்
14. சிவில் / உள்ளக கலவரங்கள்
15. இரசாயன விபத்துக்கள்

16. கதிரியக்க அவசரநிலை
17. உள்நாட்டு அல்லது கடல்சார் எண்ணெய் வெளியேற்றம்
18. அணுஆயுத அனர்த்தம்
19. நகர / காட்டுத்தீ
20. கரையோர மண்ணரிப்பு
21. சுழற்காற்று மின்னல் தாக்கம் கடுமையான இடித்தாக்கம்

### *2.1 நோக்கம்*

இலங்கைக்குள் பாதுகாப்பான சமுதாயங்களையும் நிலையான அபிவிருத்தியையும் கட்டியெழுப்புதல்

### *2.2 செயற்பாடு*

இயற்கை, தொழில்துறைசார் மற்றும் செயற்கை அனர்த்த அபாயங்களை முறையாக முகாமைத்துவம் செய்து சனசமூகங்களுக்கிடையிலும் நாட்டிலும் பாதுகாப்புக் கலாசாரத்தை கட்டியெழுப்புதல்.

### *2.3 நோக்கங்கள்*

நாடுதளுவிய நிர்வாகக் கட்டமைப்புக்களை அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், மாவட்ட பிரதேச மற்றும் கிராம சேவையாளர் நிர்வாகங்களை ஒருங்கிணைத்து பின்வருவன தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி கண்காணித்தல்:


- ➢ அபாயம் தொடர்பான நிலப்பட வரைபும் ஆபத்து மதிப்பீடும்
- ➢ தகவல் முகாமைத்துவம்
- ➢ நெடுக்கால அனர்த்தத் தணிப்பு நடவடிக்கை
- ➢ முன்னெச்சரிக்கை வழங்கல் தகவல் பரிமாற்றம்
- ➢ அனர்த்தம் ஏற்படும்போது பதிலிறுப்பு நடவடிக்கைகளை செய்வதற்கான தயார்நிலை
- ➢ அவசரநிலை செயற்பாட்டு முகாமைத்துவம்
- ➢ அனர்த்தத்திற்கு பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவம்

## 2.4 *அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை*

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைதடதுவ சட்டத்தின் ஆணையின்படி அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவை (அ.மு.தே.பே.) 2005 இல் தாபிக்கப்பட்டது. மேதகு ஜனாதிபதி அ.மு.தே.பேரவையின் தவிசாளராக இருப்பதுடன் அனர்த்த முகாமைத்துவத்தின் உயர் பீடமாகவும் இப்பேரவை விளங்குகின்றது.

தேசிய சபையின் பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**தேசிய சபையின் கட்டமைப்பு**




**அனர்த்த முகாமைத்துவ மற்றும் தேசிய சபையின் கட்டமைப்பு**

*அ.மு.தே.ச. யி ன் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு:*

| | |
|---|---|
| தவிசாளர் | மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ |
| உபதவிசாளர் | கௌரவ பிரதம அமைச்சர் டீ.எம். ஜயரத்ன. |
| எதிர்க்கட்சித் தலைவர் | கௌரவ ரணில் விக்கிரமசிங்க. |

***பின்வரும் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள்:***

| | |
|---|---|
| பாதுகாப்பு | மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ |
| பொலிஸ் | மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ |
| நிதி திட்டமிடல் | மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ |
| பெருந்தெருக்கள் | மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ |
| கரையோப் பாதுகாப்பு | மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ |
| நகர அபிவிருத்தி | மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ |
| அனர்த்த முகாமைத்துவம் | கௌரவ மகிந்த அமரவீர |
| சமூக சேவைகள் | கௌரவ பீலிக்ஸ் பெரேரா |
| சுற்றாடல் | கௌரவ அனுர பிரியதர்ஷன யாப்பா |
| பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் | கௌரவ டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன |
| சுகாதாரம் | கௌரவ மைத்திரிபால சிறிசேன |
| தொழில்நுட்ப ஆராய்ச்சி | கௌரவ(திருமதி)பவித்திராவன்னியாராச்சி |
| நிர்மாண, பொறியியல்சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் | கௌரவ விமல் வீரவன்ச |
| நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவம் | கௌரவ நிமல் சிறிபால த சில்வா |
| மின்வலு மற்றும் எரிசக்தி | கௌரவ சம்பிக்க ரணவக்க |
| காணி, காணி அபிவிருத்தி | கௌரவ ஜானக பண்டார தென்னக்கோன் |
| கடற்றொழில், நீர்வளமூலங்கள் அபிவிருத்தி | கௌரவ ராஜித சேனாரத்ன |
| வெளிநாட்டலுவல்கள் | கௌரவ ஜீ.எல். பீரிஸ் |
| நீர்வழங்கல், வடிகாலமைப்பு | கௌரவ தினேஸ் குணவர்தன |

| | |
|---|---|
| கல்வி | கௌரவ பந்துல குணவர்தன |
| மீள்குடியேற்றம் | கௌரவ குணரத்ன வீரகோன் |
| பொருளாதார அபிவிருத்தி | கௌரவ பெஸில் ராஜபக்ஷ |
| கைத்ொழில், வாணிபம் | கௌரவ அப்துல் றிஸாட் பதியுதீன் |
| புனர்வாழ்வளிப்பு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு | கௌரவ சந்திரசிறி கஜதீர |
| கமத்தொழில் | கௌரவ மகிந்த யாப்பா அபேவர்தன |

2010 திசம்பர் 28ஆம் திகதி அனர்த்த முகாமைத்துவ தேசிய சபை கூடியதுடன், அனர்த்த அபாயக் குறைப்பு செயற்பாடுகள் - விசேடமாக திட்டங்கள் தயாரித்தல், நாட்டில் ஏற்படும் மண்சரிவு, வெள்ள அபாயங்கள் தொடரபான விடயங்களைக் கலந்துரையாடியது. கொள்கை தொடர்பான பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

## 3. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சுருக்கமான தோற்றப்பாடு

### *3.1 நிறுவகம்*

அ.மு.நி. ஒரு பணிப்பாளர் நாயகத்தின தலைமைத்துவத்தின கீழ் பணிப்பாளர்கள் மற்றும் உப பணிப்பாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 5 பிரிவுகளையும் 3 உபபிரிவுகளையும் உள்ளடக்கித் தாபிக்கப்பட்டது. 5 பிரிவுகளாவன: தொழில்நுட்பம் மற்றும் தணிப்பு தொடர்பான அனர்த்த முகாமைத்துவம், பல்வேறு ஆபத்துக்கள் தொடர்பான முன்னெச்சரிக்கைத் தகவல் பரப்புதல், தயார்நிலை திட்டமிடல், கல்வி மற்றும் பொதுசன விழிப்புணர்ச்சி மற்றும் அவசரநிலை நடவடிக்கை நிலையம் என்பனவாகும்.. உபபிரிவுகளாவன: நிதி, மனிதவளம் மற்றும் நிர்வாகம் மற்றும் ஊடகம். மாவட்ட மட்டத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளன.

### *3.2 அனர்த்த முகாமைத்துவநிலைய தொழிற்பாடுகள்*

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அ.மு.நி. செயற்பாடுகளாவன பின்வருமாறு:

1. இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்கள் தொடர்பான நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும் முகாமைத்துவம் செய்வதும்.

2. அனர்த்தத் தணிப்பு, பதிலிறுப்பு மற்றும் மீண்டெழுதல் தொடர்பாகக் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல்.

3. சம்பந்தப்பட்ட இலக்குகளை ஒதுக்கப்பட்ட வளங்களைக்கொண்டு அடைந்து கொள்ளும் முகமாக தேசிய திட்டமிடல் அதிகார சபையுடனான கால அட்டவணைக்கிணங்க அவ்வாறான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டல்.

4. தேசியக் கொள்கையின் அடிப்படையில் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் மற்றும் தேசிய அவசரநிலைச் செயற்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை வகுத்தல்.

5. அனர்த்தத் தணிப்பு, பதிலிறுப்பு மற்றும் மீண்டெழுதல் தொடர்பான கருத்திட்டங்களை ஆரம்பித்து வெளிநாட்டு நிதியுதவிளை ஒருங்கிணைத்தல்.

6. பொறுப்புக்களை உரிய காலத்தில் நிறைவேற்றுவதனை உறுதிசெய்யும் முகமாக அமைச்சர்கள், அரச அதிகார சபைகள், முகவர்கள், தனியார்துறை முகவர்கள், அ.சா.நி. கள், மற்றும் ச.அ.சா.நி.கள் ஆகியவற்றுடன் நெருக்கமாகச் செயற்படல்.


7. தேசிய அனர்த்தங்கள் மற்றும் செயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்.

8. இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்களின்போது மீட்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.

9. முன்னெச்சரிக்கை முறைமைகள்.

10. வீடமைப்பு மற்றும் கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் தொடர்பாக ஆய்வும் அபிவிருத்தியும்.

### 3.3 அனர்த்த முகாமைத்துவ நிலையக் கட்டமைப்பு




### 3.4 *அ.மு.நி. அலுவலர்களின் சுருக்கமான தொகுப்பு*

அனர்த்த முகாதைத்துவ நிறுவக ஒழுங்கமைப்புக் கட்டமைப்புகளை அனர்த்தத் தணிப்பு மற்றும் தொழில்நுட்பம், அவசரநிலை செயற்பாடுகள், பயிற்சி மற்றும் விழிப்புணர்ச்சி, தயார்நிலை திட்டமிடல், முன்னெச்சரிக்கை மற்றும் நிர்வாகம், நிதி ஆகிய பிரதான செயற்பாட்டுப் பிரிவுகளைக் கருத்திற்கொண்டு பணியாள் வெற்றிடங்கள் நிரப்பல் முன்னெடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி (இளைப்பாறிய)<br>எம்.ஏ. ஆங்கிலம் மற்றும் நிர்வாகம் (சப்பிரகமுவ)<br>மனிதவளங்கள் முகாமைத்துவ டிப்ளோமா (NIBM) |
| பணிப்பாளர் (தொழில்நுட்பம் மற்றும் தணிப்பு நடவடிக்கை) | திரு.யூ.டபிள்யூ.எல். சன்றதாஸ<br>MSc. சிவில் பொறியியல்<br>நீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் பராமரிப்பு டிப்ளோமா, Middlesex Polytechnic (UK) |
| பணிப்பாளர் (பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்ச்சி) | |
| பணிப்பாளர் (பயிற்சி மற்றும் விழிப்புணர்ச்சி) | திருமதி. லலானி இம்புலான<br>BSc (பொறியியல்) – மொரட்டுவை<br>நீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் பராமரிப்பு டிப்ளோமா<br>திரு. எஸ்.எம்.கே.பி. நந்தரத்ன<br>MA சமூகவியலாளர், MA பௌத்த கல்வி |
| பணிப்பாளர் (அவசர நிலை செயற்பாடுகள்) | பிரிகேடியர். N. B. வேரகம (ஓய்வுபெற்ற.)<br>BSc விஞ்ஞானம் (பேராதனை பல்கலைக்கழகம்)<br>MSc முகாமைத்துவம் (KDA) |
| பிரதிப் பணிப்பாளர் (அவசர நிலை செயற்பாடுகள்) | திரு. K. P. A. தர்மரத்ன<br>BCom (விசேட) பேராதனை, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (PGD) சனசமூக அபிவிருத்தி (கொழும்பு பல்கலைக்கழகம்) |

| | |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (அவசர நிலை செயற்பாடுகள்) | லெப்டினன். கேனல் P.A..J. பீரிஸ்<br>தொலைத் தொடர்பு பொறியியல், இராணுவக் கல்லூரி இந்தியா, தொடர்பாடல் டிப்ளோமா அமெரிக்க இராணுவம் |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி) | நிதி. D. H. B. எதிரிசிங்ஹ<br>Bsc. முகாமைத்துவம் (விசேடம்) பொது நிதியியல் டிப்ளோமா. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனச் சான்றிதழ் |
| பிரதிப் பணிப்பாளர் (ஊடகம்) | திரு. W. A. சரத் லால் குமார<br>மக்கள் தொடர்பு டிப்ளோமா |
| உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம், அனர்த்தம்) | மிஸ். அநோஜா செனவிரத்ன<br>Bsc. சரித்திரவியல் (விசேடம்), சிவில் பொறியியல் (பகுதி I,II), Msc (நீர் வள முகாமைத்துவம்) நெதர்லாந்து, மனிதவள அபிவிருத்தி முகாமைத்துவப் பட்டப் பின்படிப்பு, சர்வதேச டிப்ளோமா. |
| உதவிப்பணிப்பாளர் (IT) | திரு. சிறிமல் சமனசிறி<br>BSc., PGD (RS/GIS) அவுஸ்திரேலியா கணினிச் சங்கம் |
| உதவிப்பணிப்பாளர் (பயிற்சி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு) | திரு. பாலித பண்டார<br>BSc., MPhil கமத்தொழில் பொறியியல் |
| உதவிப்பணிப்பாளர் (பயிற்சி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு) | திரு. H. M. K. R. ஹேரத்<br>BSc., MSc., PGD கல்வி |
| உதவிப்பணிப்பாளர் (முன்னெச்சரிக்கை) | திரு. பிரதீப் கொடிப்பிலி |

| | |
|---|---|
| | BSc. விவசாயம் (கௌரவ) விசேடம் |
| உதவிப்பணிப்பாளர் (முன்னெச்சரிக்கை) | திரு. ரவி ஜயரத்ன |
| | BSc. MSc. விவசாயம் |
| உதவிப்பணிப்பாளர் (அவசர நிலை செயற்பாடுகள்) | மேஜர். W. J. M. நவரத்ன (இளைப்பாறிய) |
| | BA, PGD கற்றவியல், ஆகிலத்தில் டிப்ளோமா |
| உதவிப்பணிப்பாளர் (அவசர நிலை செயற்பாடுகள்) | திரு. H. I. திலகரத்ன |
| | BSc., MSc விவசாயம் |
| நிர்வாக உத்தியோகத்தர் | திரு. V. S. ஹெட்டிஆரச்சி |
| | BA கொழும்பு |

**3.4.1** **2010 திசம்பர் 31இல் உள்ளவாறு விடுவிக்கப்பட்ட அ.மு.நி. பணியாட்டொகுதி பின்வருமாறு:**

| பதவி | அனுமதிக்கப்பட்ட பணியாள் தொகுதி | தற்போதைய பணியாள் தொகுதி | 2010.12.31இல் உள்ளவாறு பணியாட்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | அமைச்சர்கள் / அ.மு.தே.ச. நியமனங்கள் | ஒப்பந்த அடிப்படை | இணைப்பு அடிப்படை | ஏனைய முகவர்களிடமிருந்து விடுவிக்கப்பட்ட | வெற்றிடங்கள் |
| பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | 01 | - | - | - | - |
| பணிப்பாளர் | 05 | 02 | - | 02 | - | - | 03 |
| பிரதிப் பணிப்பாளர் | 06 | 04 | - | 02 | - | 02 | 02 |
| உதவிப் பணிப்பாளர் | 12 | 08 | - | 6 | 01 | 01 | 04 |
| மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பாளர் | 25 | 20 | - | 11 | 01 | 08 | 05 |
| மாவட்ட அனர்த்த முகாமைத்துவ | 100 | | - | 86 | - | - | 14 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உதவியாளர் | | 86 | | | | | |
| தனிப்பட்ட உதவியாளர் | 01 | - | - | - | - | - | 01 |
| நிர்வாக அலுவலர் | 01 | 01 | - | 01 | - | - | - |
| உதவி தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 02 | 02 | - | 02 | - | - | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 27 | 14 | - | 14 | - | - | 13 |
| KKS | 05 | 05 | - | 05 | - | - | - |
| வரவேற்பாளர் | 01 | 01 | - | 01 | - | - | - |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | - | - | - | - | - | 02 |
| சாரதி | 30 | 13 | - | 13 | - | - | 17 |
| தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் | 03 | - | - | - | - | - | 03 |
| தொலைபேசி இயக்குநர் | 09 | - | - | - | - | - | 09 |
| தொலைபேசி பரிவர்த்தனை மேற்பார்வையாளர் | 01 | - | - | - | - | - | 01 |
| பிரதம மேற்பார்வையாளர் | 01 | - | - | - | - | - | 01 |
| வானொலி இயக்குநர் | 01 | - | - | - | - | - | 01 |
| **மொத்தம்** | **233** | **157** | **01** | **93** | **02** | **11** | **76** |

### ***3.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகுகள் (மா.அ.மு.இ.அ.)***


மா.அ.மு.இ.அ. களில் ஒரு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளரும் உதவி இணைப்பாளர்களும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். உதவி இணைப்பாளர்களின் எண்ணிக்கை அனர்த்தங்களின் தன்மையைப் பொறுத்து மாவட்டத்துக்கு மாவட்டம் மாறுபடும்.

25 மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ள மா.அ.மு.இ.அ. களில் மொத்தமாக 20 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர்களும் 86 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி இணைப்பாளர்களும் பணியாற்றுகின்றார்கள். தற்போது திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு

மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனை மேற்படி மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவத் தணிப்பு செயற்பாடுகள் உதவி இணைப்பாளர்களால் முன்னெடுக்கப் படுகின்றன.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகுகளில் 97 இராணுவ மற்றும் விமானப்படை வீரர்கள் இணைக்கப்பட்டுள்ள அதேநேரம் மா.அ.மு.இ.அ. கள் பிரதேச செயலகங்களில் தாபிக்கப்பட்டுள்ளனர்.

**மாவட்ட அனர்த்த முகாமைத்து பொறிமுறை**




## *3.5 2010ஆம் ஆண்டில் வாய்த்த சந்தர்ப்பங்களும் இடையூறுகளும் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் கருத்துக்கள்*

1. அ.மு.நி. நாடளாவிய ரீதியில் அவசரகால பதிலிறுப்பு நடவடிக்கைப் பொறிமுறையை ஸ்திரப்படுத்தக்கூடியதாக இருந்துள்ளது. இருப்பினும், ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக அவசரநிலை பதிலிறுப்பு பொறிமுறையினை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கான தேவை உணரப்பட்டுள்ளது.

2. அனைத்து ஊழியர்களும் தற்போது ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுகின்றனர். மேலும், அ.மு.நி. நிறுவனத்தை மீள்கட்டமைப்பதற்கான ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்து அவர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை

எடுத்துள்ளது. அவர்களின் சேவை நிச்சயமற்றிருப்பதால் அவர்களின் செயலாற்றுகை பாதிப்படைந்துள்ளது. மீள்கட்டமைப்பு இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. 2011 ஏப்பிரல் மாத இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3. 76 வெற்றிடங்கள் பணிப்பாளர் (தயார்நிலை திட்டமிடல்), பணிப்பாளர் (பயிற்சி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்ச்சி) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (ஆளணியினர் மற்றும் நிர்வாகம்) உட்பட நிரப்பப்படவேண்டியுள்ளது.

4. முதலீட்டு நிதியைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் திட்டமிட்ட கருத்திட்டக் காலத்திற்குள் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைப் பாதித்துள்ளது.

5. தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு (தே.அ.மு.ஒ.கு) ஜயோகோ செயற்பாட்டு வேலைச் சட்டத்திற்கு இணங்க (ஜ.செ.வே.ச) தாபிக்கப்பட்டது. ஜ.செ.வே.ச. மானது அனைத்து அரச முகவர்கள், சர்வதேச / அ.சா.நி. கள் மற்றும் அ.அ.குறைப்புக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சிநிரல் தொடர்புபட்ட முகவர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடும் ஒரு பொதுமன்றமாகும். இச்செயற்பாடு வெற்றியளித்துள்ளதுடன், ஒரு சிறந்த நடைமுறையாகவும் கருதப்படுகின்றது.

6. வடக்கு மாகாண ஒன்றிணைக்கப்பட்ட உபாய சுற்றாடல் மதிப்பீடு 2010ஆம் ஆண்டு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது முடியும் தறுவாயிலுள்ளது. இம்மதிப்பீடு வெற்றியளிக்கும் பட்சத்தில் நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

## *3.6 பணியாள் ஆட்சேர்ப்பு*

அ.மு.நி. மீள் கட்டமைப்புக்குட்படுத்தப்படுகின்ற மேலும் ஆட்சேர்ப்புத் திட்டமும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டிகளுக்கமைய மீளாய்வு செய்யப்படுகின்றது. அ.மு.நி. 76 வெற்றிடங்களில் 10 ஐ 2010 இல் நிரப்பியது. 2010 இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஆட்சேர்ப்பு மீள்கட்டமைப்பு செயற்பாட்டின் காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. அ.மு.நி. ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பணியாட்களை நிலைநிறுத்திக்கொள்ளும் விடயத்தில் பாரிய சிக்கல்களை பின்வரும் காரணிகளால் எதிர்நோக்கியது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் தங்களை தமது வேலைத்தலத்திலிருந்து விடுவித்துக்கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.

- தொழில் உத்தரவாதம் ஒப்பந்த அடிப்படையில்;

- இணைக்கப்பட்ட அலுவலர்களின் காலத்தை நீடித்துக்கொள்வதில் ஏற்பட்ட சிரமம்;
- நிலையான சம்பள அளவுத்திட்டத்தின் காரணமாக அனுபவமுள்ள அலுவலர்கள் அ.மு.நி. இல் இணைவதற்கு காட்டிய தயக்கம் மற்றும் கடன்வசதிகள், சம்பள அதிகரிப்புகள் மற்றும் வைத்திய காப்புறுதித் திட்டங்கள் போன்ற சலுகைகள் இன்மை.

### 3.7 *அ.மு.நி. தின் மீள்கட்டமைப்பு*

அ.மு.நி. தின் விஸ்தரிப்பு மற்றும செயற்பாடுகளைப் பலப்படுத்துதல் ஆகிய காரணங்களால், சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவுடன் பலசுற்றுக் கலந்துரையாடல்களுக்குப் பின்னர் அ.மு.நி. யத்தின் மீள்கட்டமைப்பும் பணிகளின் முக்கியத்துவம் இனங்காணப்பட்டது. எஸ்.ஓ.ஆர் (SoR) உடனான நிறுவன மீள்கட்டமைப்பு தொடர்பான நகல் பிரேரணையொன்று அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. மீள்கட்டமைப்புப் பணிகளுடன் ஒப்பந்த அடிப்படைப் பணியாட்களுக்கு நிரந்தர நியமனம் கொடுக்கவும் திட்டமிடப்பட்டது.

### 3.8 *அ.மு.நி. அலுவலகம்*

2008 திசெம்பர் 27ஆம் திகதி அத்திவாரமிடப்பட்டதுடன், கட்டிட நிர்மாணப் பணிகள முன்னெடுக்கப்படுகின்றன. தற்சமயம் கட்டிடத்தின் மூன்றுமாடிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2011ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கட்டிட நிர்மாணம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.9 *அனர்த்த முகாமைத்துவ சட்ட மறுசீரமைப்பு*

அ.மு.நி. 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைச் செயற்பாட்டில் இனங்காணப்பட்ட சட்டச் சட்டகத்தின் குறைபாடுகளின் மத்தியில் செயலாற்றி வருகின்றது. மறுசீரமைக்கப்பட்ட நகல் சட்ட வரைபு தே.அ.மு.கு. விற்கு 2010 திசம்பர் 28ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் சில திருத்தங்களும் பிரேரிக்கப்பட்டது.

## 4 தேசிய மட்டத்தில் பிரதான செயற்பாடுகள்

### 4.1 இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவக்கொள்கை

இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கை ஆவணம் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையால் 2010 திசம்பர் 28ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

### *4.2 கூட்டுத்திட்டம்*

ஐ.நா.அ. திட்டத்தின் நிதியுதவியுடனும் துறைசார் நிபுணர்களின் ஒத்துழைப்புடனும் 2010 – 2014க்கான கூட்டத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் நோக்கம், செயற்பணி, உபாயங்கள், திட்டமிட்ட செயற்பாடுகள், கண்காணிப்பு, முன்னேற்றம் மற்றும் செயலாற்றுகை மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்குகின்றது. இத்திட்டம் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையால் 2010 திசெம்பர் 28ஆம் திகதி அங்கீகரிக்கப் பட்டது.

### *4.3 தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம்*

தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் இறுதியான நகல் வரைபு முற்றுப் பெற்றுள்ளதுடன் தற்போது அங்கீகாரத்திற்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

### *4.4 'தேசத்துக்கு மகுடம்' கண்காட்சி*

2010 பெப்ரவரி 04ஆம் திகதி கண்டியில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் அனர்த்த அபாய குறைப்புத் தொடர்பான தகவல்களை அவசரநிலை செயற்பாட்டு நிலையத்துடன் (அ.செ.நி) இணைந்து பயிற்சிப்பிரிவு காட்சிப்படுத்தி, அனர்த்த அபாயக் குறைப்புத் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களுக்கிடையில் மேலோங்கச் செய்யும் தமது நோக்கத்தில் செயற்பட்டது. மக்களுக்கு தயார் நிலையிலிருத்தல், தணிப்பு, முன்னெச்சரிக்கை முறைகள் அவசரநிலை பதிலிறுப்பு மற்றும் நிவாரண ஒருங்கிணைப்பு தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டன.

### *4.5 2010ஆம் ஆண்டின் தேசிய பாதுகாப்புத் தினம்*

மாவட்ட செயலகம் மற்றும் ஏனைய அரச மற்றும் அரசு சாரா முகவர்களுடன் இணைந்து தேசிய பாதுகாப்புத் தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது. தே.அ.மு.கு. உறுப்பினர்கள் பதாதைகள் காட்சிப்படுத்தும் வாகனங்களையும் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்களையும் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பரிசில்களையும் வழங்கி தேசியப் பாதுகாப்புத் தினத்தைக் கொண்டாட உதவினர். இலங்கை மக்களுக்கிடையே பாதுகாப்பு கலாசாரத்தை அபிவிருத்தி செய்யும் முகமாகவும் பொது மக்களிடையே அனர்த்த ஆபத்து தணிப்பு செயற்பாடுகளை கொண்டுசெல்லும் முகமாக சுயாதீனத் தொலைக்காட்சி சேவையினூடாக அவை நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்பட்டது. ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் ஊர்வலத்தில் பங்குபற்றியதுடன், 19 வாகனங்கள் பல்வேறு அனர்த்த அபாயத் தணிப்புப் பதாதைகளைக் காட்சிப்படுத்தியது.





*அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீர யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்குவதிலும் 2010 திசம்பர் 20ஆம் திகதி நடைபெற்ற தேசிய பாதுகாப்புத்தின கொண்டாட்டத்தினை மிகவும் முக்கிய உறுப்பினர்கள்(VIP) பார்வையிடலும்.*

## *4.6 ஆலோசனைக் குழுக்கள்*

### *4.6.1* அனர்த்ததுக்கான திரந்த, பாதுகாப்பற்றஅபிரதேசங்களில் நிர்மானப் பணிகள் மற்றும் ஆலோசனை

கல்வி நிறுவனங்கள், தொழில்நுட்ப முகவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள் உள்ளடங்கிய தொழில்நுட்ப ஆலோசனைக்குழு (தொ.ஆ.கு) அனர்த்த அபாயங்களுக்கு முகங்கொடுக்கும் சாத்தியமுள்ள பகுதிகளில் எவ்வாறு சிறந்த கட்டிட நிர்மாணங்களை மேற்கொள்ள வேண்டுமென்பதை அடிக்கடி கலந்துரையாடித் தீர்மானிக்கின்றது. இக்குழு மண்சரிவு, சுனாமி, வெள்ளம் மற்றும் சூறாவளி அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய பிரதேசங்களில் எவ்வாறு கட்டிட நிர்மாணங்கள் செய்ய வேண்டுமென்பது தொடர்பான வழிகாட்டிகளைத் தயாரித்துள்ளது. ஆபத்துக்குள்ளாகக்கூடிய பிரதேசங்களில் பாடசாலை கட்டிடங்களை நிர்மாணம் செய்தல் தொடர்பான திட்டங்களைத் தயாரித்து விசேடமாகக் கிழக்கு மாகாணத்தில் அவற்றை கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பித்தும் இக்குழுவின் வழிகாட்டல்களுக்கமைய அனர்த்தத்துக்குப் பின்னரான வைத்தியசாலை நிர்மாணம் தொடர்பான திட்டங்களும் கட்டிடத் திணைக்களத்தால் அபிவிருத்தி செய்யப்படும்.

அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தும் முகமாகத் தெரிவு செய்யப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் பொறியியலாளர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டது. மேலும், அனர்த்த ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களில் நிர்மானப் பணிகள் தொடர்பான கட்டிட வழிகாட்டல்கள் தொடர்பான வெளியீடுகள் மீளாய்வுக்குட்பட்டு குழுவால் பிரசுரிக்கப்படும்.

### *4.6.2 அவசர வெள்ளத் தணிப்புக் குழு*

ஆயுதப்படையினர், பொலிஸ், கொழும்பு தேசிய வைத்தியசாலை தீயணைப்புப்படை, தே.நீ.வ.ச., இலங்கை ரெலிகொம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட முகவர்கள் ஆகியவற்றின் பிரதிநிதியினர் இக்குழுவின் உறுப்பினர்கள் இக்குழு அ.மு.நி. பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நான்கு மாதங்களுக்கு ஒருமுறைகூடி அனர்த்த பதிலிறுப்பு நடவடிக்கைகளின் போது அவரகால தயார்நிலை தொடர்பாக மீளாய்வு செய்கின்றது.

### *4.6.3 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழு (தே.அ.மு.ஒ.கு.)*

அனர்த்தத் தணிப்புத் தொடர்பான சர்வதேச உபாயத்தின் (அ.ந.ச.உ) சிபார்சின் அடிப்படையில் ஜகோ Hyogo வேளைச் சட்டகத்தின் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் கண்காணிக்கவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் தே.அ.மு.ஒ.கு.வை அரச முகவர்கள், நன்கொடையாளர்கள், ஐ.நா. முகவர்கள், ச.அ.சா.நி.கள். அ.சா.நி.கள், ஊடக தொழில் நிபுணர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளின் தலைமையில் வரும் தனியார்துறை ஆகியவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தாபித்தது. தே.அ.மு.ஒ.கு.வின் இலக்கு யாதெனில், அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல் தொடர்பாக தனது வகிபாகத்தைச் செலுத்துதல் மற்றும் அனர்த்தங்களுக்கு தாக்குக்கொடுக்கக்கூடிய சமுதாயங்களைக் கட்டியெழுப்புதலும் ஆகும். 06 நிறுவனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் 14 உறுப்பினர்களுடன் 2007ஆம் ஆண்டில் உதயமான தே.அ.மு.ஒ.கு. 2010ஆம் ஆண்டின் இறுதியளவில் 73 நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் 127 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.



*தேசிய மட்டத்தில் அனர்த்தங்களைக் குறைத்துக்கொள்ளுதல் தொடர்பாக மாதத்துக்கொரு தடைவ கூட்டங்கள் கூட்டப்பட்டு தேசிய அனர்த்த தணிப்பு நடவடிக்கை தொடர்பாகக் கலந்துரையாடப்படுகின்றது.*

### *4.6.4 கொழும்பில் வெள்ளப்பெருக்குப் பாதிப்புக்களைத் தணிப்பதற்கான குழு*

கொழும்பு மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், கொழும்பு மாவட்ட உள்ளூர் அதிகார மன்றங்கள், இலங்கை காணி மீட்டெடுத்தல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணிப்பயன்பாடு மற்றும் திட்டமிடல் திணைக்களம், விவசாயத் திணைக்களம், மத்திய சூழல் அதிகாரசபை, கடற்படை, அனர்த்த முகாதைத்துவ நிலையம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் வகையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் இக்குழு வழிநடத்தப்படுகின்றது. இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுக் கலந்துரையாடப்பட்ட விடயங்களாவன:

i. ஈரலிப்பான நிலங்கள், நெற்காணிகள், கால்வாய்கள் மற்றும் கால்வாய்க்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் போன்றவற்றைச் சட்டவிரோதமாக நிரப்புதல்.

ii. சில கால்வாய்கள் சாக்கடைகள் தொடர்பான பொறுப்பற்ற பராமரிப்பு.

iii. கால்வாய் கட்டமைப்பில் திண்மக் கழிவுகளை வீசுதல்.

iv. கால்வாய் மற்றும் சாக்கடைகளைப் பராமரிப்பதற்கான நிதி நெருக்கடி.

## *4.7 அனர்த்த ஆபத்துக்களைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுத்தல் தொடர்பான தேசிய மாநாடு (CCA)*

அனர்த்த ஆபத்துக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுத்தல் தொடர்பான தேசிய மாநாடு (சீசீஏ) 2010 ஒக்ரோபர் 13ஆம் திகதி நடைபெற்றது. இது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இலங்கையின் மற்றொரு மைல்கல்லாகும். சர்வதேச இயற்கை அனர்த்த தணிப்புத் தினத்துடன் ஏக காலத்தில் இடம்பெற்ற மாநாட்டில் 4 பிரதான தலைப்புக்கள் காணப்பட்டன: ஆபத்து, பாதிக்கக்கூடிய சாத்தியக்கூறு மற்றும் அபாய மதிப்பீடு, ஆய்வும் அனர்த்த முகாமைத்துவத்துக்கான கற்கை உபகரணங்களும், காலநிலைமாற்ற சவால்களுக்கு ஈடுகொடுத்தல், முன்னாயத்தம், பல்வகை ஆபத்துக்களுக்கான முன்னெச்சரிக்கை மற்றும் பதிலிறுப்பு நடவடிக்கைகள். மாநாட்டில் மொத்தமாக 39 ஆய்வுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுக் கலந்துரையாடப்பட்டன. அதேவேளை சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளிலிருந்து 15 பதாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அமர்வுகளின் துறைசார் நிபுணர்களின் முக்கிய உரைகளும் இடம்பெற்றன.



*2010 ஆம் ஆண்டு இ.ம.க. யில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் அ.ஆ.கு. தொடர்புடைய ஓர் அறிக்கை பார்வையாளர்களுக்கு வழங்கப்படல்.*

### ***4.8 இணையத்தளம்***

அ.மு.நி. இணையத்தளம் மீள்வடிவமைக்கப்பட்டு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் www.dmc.gov.lk. யில் காணப்படுகின்றது.

## **5. தணிப்பும் தொழில்நுட்பப் பிரிவும்**

### **5.1 அறிமுகம்**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கடந்தகால கவனிப்பின் பிரகாரம் காலநிலை மாற்றத்தின் விளைவாக இலங்கை பாரிய காலநிலை சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. 2009 திசெம்பர் மற்றும் 2010 மே மாதங்களில் களுத்துரை, கம்பஹா, கொழும்பு, காலி மற்றும் மாத்தரை மாவட்டங்கள் பாரிய வெள்ளங்களுக்கு முகங்கொடுத்துள்ளன. அதேகாலப்பகுதியில் குருனாகல், அநுராதபுரம், அம்பாறை, மொனராகலை, மன்னார், வவுனியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள் பாரிய வரட்சிக்கு முகங்கொடுத்தது. மத்திய மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மற்றும் பதுளை மாவட்டத்திலும் அதிகரித்த மலைவீழ்ச்சி காரணமாக மண்சரிவுச் சம்பவங்கள் அதிகரித்தன. எனவே, அனர்த்த முகாமைத்துவ நிலைய தணிப்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு வெள்ளம் மற்றும் மண்சரிவு ஆபத்துக்களை தணிக்கும் கருத்திட்டங்களுக்கு இம்மாவட்டங்களில் முக்கியத்துவமளிக்கப்பட்டது. மேலும் வரட்சிக்கு முகங்கொடுக்கும் பிரதேசங்களில் வரட்சியின் கொடுமையை குறைக்கும் முகமாக பண்டைய காலத்தில் மழைநீரை சேமிப்பதற்கும் வரட்சியின்போது அவற்றை உபயோகிழப்பதற்குமாக கட்டப்பட்டிருந்த குளங்களை புணரமைப்பு செய்வதற்கு ஊக்குவித்தது.

## 5.2 இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ கருத்திட்டங்கள்

அ.மு.நி. சமர்ப்பித்த பிரேரணைகளை கருத்திற்கொண்டு இலங்கை அரசாங்கம் 2010 இல் 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியது. ஒதுக்கப்பட்ட நிதியில் 30 மில்லியன் வெள்ள தணிப்பு கருத்திட்டங்களுக்காக அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கும் 30 மில்லியன் ரூபாவை உயர் மண்சரிவு ஆபத்துள்ள மற்றும் பாறைகள் நிறைந்த கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா போன்ற மாவட்டங்களில் மலைப்பள்ளங்களை ஸ்திரப்படுத்துவதற்கும் தணிப்பதற்கும் ஒதுக்கியது.

### 5.2.1 வெள்ளத்தணிப்பு கருத்திட்டங்கள்

கடந்தகால அழிவுகள், பதிலிறுப்பு நடவடிக்கைகள், நிவாரணம் மற்றும் முன்னைய அனர்த்தங்களின் தரவுகளின் பகுப்பாய்வுகள் காட்டுவது யாதெனில் மாவட்டங்கள் விசேடமாக பருவமழை காலங்களில் நகர மற்றும் ஆற்று வெள்ளத்தின் மூலமாக எவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்றன என்பதாகும். அ.மு.நி. மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள், நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண நீர்ப்பாசன திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் போன்ற முகவர்களுடன் கலந்தாலோசித்து நகர வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகும் களுத்துரை கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, காலி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முன்னெடுக்கக்கூடிய வெள்ளத்தணிப்பு கருத்திட்டங்களை இனங்கண்டுள்ளது.

எனவே அ.மு.நி. கால்வாய் பராமரிப்பு மற்றும் சுத்தம் தொடர்பான பொறிமுறையொன்றை விசேடமாக கொழும்பு மற்றும் களுத்துரை மாவட்டங்களில் தாபித்துள்ளது. இரண்டாவதாக மக்களை அப்புறப்படுத்தும் வழிகளாக பயன்படுத்தக்கூடிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உப பாதைகளை புணரமைப்பதற்கு முன்னுரிமையளித்தது.

வெள்ளக்குறைப்பு செயற்றிட்டங்களுக்கான பொதுவான இடைத்தடை மாதிரிகளாவன:

அ. கால்வாய் படுக்கையிலிருந்து நீர் இலகுவாகப் பாய்ந்தோடுவதனை தடுக்கும் புல், தாவரங்கள் மற்றும் வண்டல் மண் அகற்றுதல்.

ஆ. கால்வாய்களை பராமரித்தலின் பொருட்டு இயந்திரங்களின் போக்குவரத்ததை இலகுபடுத்துவதற்காக கால்வாயுடனான அணைகளை அமைத்தல்.

இ. வெள்ள நீர் அணையையும் கால்வாயிலுள்ள சிறிய கட்டுமானங்களையும் புனர்நிர்மாணம் செய்தல்.

ஈ. பாதிக்கப்பட்டவர்களை வெளியேற்ற இனங்கண்ட பாதைகளையும் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உபகரணங்களுக்கான நிவாரணப் பொருட்களை ஏற்றி இறக்கும் பாதைகளையும் புனர்நிர்மாணம் சய்தல்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் வெள்ளத்தணிப்பு நடவடிக்கைகாக வழங்கப்பட்ட நிதித்தொகை அட்டவணை 01 இல் தாபிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 01** வெள்ள அபாய தடுப்புக்காக ஒதுக்கிய நிதி

| மாவட்டம் | வருடத்தில் வழங்கப்பட்ட நிதி (மில்லியன்) |
|---|---|
| களுத்துரை | 21.5 |
| கொழும்பு | 5.0 |
| இரத்தினபுரி | 1.0 |
| கம்பஹா | 1.9 |
| காலி | 5.0 |

அ.மு.நி. பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட முகவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் வடிகால் திட்டங்களை கொழும்பு மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேசப் பிரிவுகளுக்கும் அபிவிருத்தி செய்துள்ளதுடன் அவற்றை பராமரிக்கும் பொறுப்புடைய முகவர்களை இனங்காணும் பணி தொடர்கின்றது. அ.மு.நி. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் கொழும்பு மாவட்டத்தில் வெள்ள அபாயத்தை தணிக்கும் முகமாக நியமிக்கப்பட்ட செயலணிக்கு பூரணமாக ஒத்துழைப்பை வழங்கியது.

### 5.2.2 வரட்சித் தணிப்பு கருத்திட்டங்கள்

விவசாயம், சுற்றாடல், காட்டுவளம் மற்றும் சக்தி போன்ற இலங்கையின் சமூக, சூழல் மற்றும் பொருளாதார துறைகளில் பாரிய தாக்கத்தை அடிக்கடி செலுத்தும் அனர்த்தமாக வரட்சி கருதப்படுகின்றதுடன் வருடாந்த இழப்பு ரூ. 300 மில்லியனையும் தாண்டுகின்றது. இலங்கை உலர்வலயத்தில் அமைந்துள்ள அநுராதபுரம், குருனாகல், மொனராகலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு நிவாரண நடவடிக்கைகளுக்காக கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட நிதிகளின் அடிப்படையில் இவை வெள்ள அனர்த்தங்களுக்கு பாதிக்கக்கூடிய மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், தணிப்பு நடவடிக்கைகள் காணப்படும் நிதியைக் கொண்டு செயற்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களான குருனாகல், மற்றும் மொனராகலை மாவட்டங்களில் நிலச்சூழல் நீர்த்தன்மையை மேம்படுத்தும் நோக்கில்

நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சிறிய நீர் வீழ்ச்சிக் குளுங்களை புனரமைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுது. வரட்சிக் காலங்களில் பயன்படுத்தக்கூடிய குடிநீர் வழங்கும் திட்டங்கள், நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு மற்றும் அணைக்கட்டு, ஆழம் குறைந்த கிணறுகள், ஆழமான கிணறுகள், விவசாயக் கிணறுகள் போன்ற கருத்திட்டங்களுக்கு அ.மு.நி. நிதியுதவி வழங்கப்பட்டு வரட்சியின் பாதிப்பை குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுது. குடிநீர்த்திட்டங்கள் பூரணப்பட:டுத்தப்பட்டுள்ளதுடன் நீர்வீழ்ச்சிக் குளங்கள் பணி தொடர்ந்தவண்ணமுள்ளன. ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகள் அட்டவணை 02 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 02: வரட்சித்தணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி**

| மாவட்டம் | வருடத்தில் வழங்கப்பட்ட நிதி (மில்லியன்) |
|---|---|
| களுத்துரை | 19.6 |
| அநுராதபுரம் | 1.1 |
| குருநாகல் | 6.0 |
| மொனராகலை | 8.4 |
| கண்டி | 2.0 |
| ஹம்பாந்தோட்டை | 0.9 |
| யாழ்ப்பாணம் | 1.7 |
| மன்னார் | 7.3 |
| வவுனியா | 1.8 |
| திருகோணமலை | 0.8 |





சீரான நீரோட்டத்தை தடுக்கும் பண்ணை அகற்றுதல் - குருநாகல்

மதவாச்சி மாறாவெவ புணரமைப்பு

**வரட்சித் தணிப்புக்கான ஏற்பாடு**.

வரட்சித்தணிப்பு தொடர்பான தேசியத்திட்டம் தயாரித்தல் அ.மு.நி., இத்திட்டத்தை தயாரிக்கும் முகமாக ஓர் தேசிய வரட்சித் தணிப்பு எண்ணக்கருவை தயாரித்துள்ளதுடன் அரச முகவர்கள் மற்றும் வரட்சி முகாமைத்துவ துறைசார் நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவை தாபித்துள்ளது.

**ஏனைய அ.ஆ.கு. நடவடிக்கைகள்**

பன்சலைக்கு வரும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் மின்னல் தாக்கு அபாயத்திற்கு இலக்காகும் அபாயத்தால் அநுராதபுரம், மிஹிந்தலை சேயாவின் வாசலை புனரமைப்பதற்கும் இடிதாங்கியொன்றை தாபிக்கவும் ரூபா. 3.5 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

## 5.3 அம்பாறை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் வெள்ளத்தணிப்பு நடவடிக்கைகள்

### 5.3.1 அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ளத்தணிப்பு

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் வெள்ள அனர்த்தங்களுக்கு அடிக்கடி முகங்கொடுத்துள்ளது. வீடமைக்கும் கருத்திட்டங்களுக்காக பள்ளமான பிரதேசங்களை மண்கொண்டு நிரப்புதல் இந்நிலைமையை மிகவும் மோசமாக்கியுள்ளது. எனவே, இவ்விரு மாவட்டங்களிலும் வெள்ளத்தணிப்பு திட்டங்கள் அவசியம் என அ.மு.நி. இனங்கண்டுள்ளது. அ.மு.நி. மேற்படி மாவட்டங்களில் வெள்ள ஆபத்ததை தணிக்கும் முகமாக ‘‘அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான பரந்த வெள்ளத்தணிப்பு கற்கை’’ எனும் ஓர் பரந்த வெள்ளத்தணிப்பு நிகழ்ச்சித்திட்டத்ததை ஐ.நா.அ.நி. நிதி ஒத்துழைப்புடன் வடிவமைத்துள்ளது. இக்கற்கை 2010 பெப்ரவரியில் முற்றுப் பெற்றுள்ளதுடன் அதன் கண்டுபிடிப்புகளும் பரிந்துரைகளும் இரண்டு மாவட்ட அலுவலர்களிடம் குறுகிய மற்றும் நெடுங்கால வெள்ள அபாயக் குறைப்புச் செயற்பாடுகளாக கலந்துரையாடப்பட்டுள்ளன. கற்கையின் பரிந்துரைக்கமைய அரச முகவர்களின் பராமரிப்பு அலகுகளின் இயலளவை ஸ்திரப்படுத்தி பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை சீராக நடைமுஜறப்படுத்தும் நோக்கில் நான்கு டிராக்டர் வண்டிகளையும் இரண்டு பாரிய மண் தோட்டும் இயந்திரங்களையும் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.3.2 பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகள்

மாவட்ட செயலாளர், நீர்ப்பாசன திணைக்கள அலுவலர்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து பொலன்னறுவை மாவட்டத்தில்

வெள்ளப்பாதிப்பை குறைக்கும் முகமாக முன்னுரிமை கருத்திட்டங்கள் இனங்காணப் பட்டன.

நாத்தாண்டிய, வென்னப்பவயில் ஹெமில்டன் கால்வாய் மற்றும் மஹாவெவ ஆகியவை ரூபா. 7.05 மில்லியன் செலவில் சுத்தம் செய்யப்பட்டன.

வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் பூரணமாக உபயோகிக்கப்பட்டன அத்துடன் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் பணிகள் தொடர்கின்றன.

**அட்டவணை 03: வெள்ளத்தணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி**

| மாவட்டம் | வருடத்தில் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட நிதி (மில்லியன்) |
|---|---|
| புத்தளம் | 0.3 |
| பொலன்னறுவை | 5.0 |
| அம்பாறை மற்றும் மட்டக்களப்பு | 25.0 |





புத்தளம் மாவட்டத்தில் கால் வாய் சுத்தப்படுத்தல்

## 5.4 கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உயர் மண்சரிவு ஆபத்துள்ள மற்றும் பாறைகள் நிறைந்த பகுதிகளில் மலைச்சாரல்களை ஸ்திரப்படுத்தலும் மண்சரிவைத் தணிப்பதும்.

அ.மு.நி. நுவரெலியா, கண்டி மாவட்டங்களில் உயர் மண்சரிவு ஆபத்துள்ள மற்றும் பாறைகள் நிறைந்த பகுதிகளில் மலைச்சாரல்களை ஸ்திரப்படுத்தல் மற்றும் மண்சரிவை தணித்தல் மற்றும் மாத்தறை மாவட்டத்தில் நில .நடுக்கம் தொடர்பான செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. இக்கருத்திட்டம் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்திற்காக மொத்தமாக 35 மில்லியன் 2010 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டது.

கருத்திட்டம் தொடர்கின்ற அதேவேளை அதற்கான நிதி விபரங்கள் அட்டவணை 03 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 03: மண்சரிவு தணிப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடு**


| மாவட்டம் | ஆண்டில் நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்ட நிதி (ரூபா. மில்லியன்) |
|---|---|
| கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா | 51.0 |

## 5.5 வடக்கு மாகாணத்திற்கான ஒருங்கிணைப்பு உபாய சுற்றாடல் மதிப்பீடு (ஒ.உ.சு.ம)

வடமாகாணத்திற்கான ஒ.உ.சு.ம.டை அபிவிருத்தி செய்வதற்காக அ.மு.நி. சீ.ஈ.ஏ.யுடன் இணைந்து செயற்பட்டது சுற்றாடல் ரீதியாக பாதிக்கக்கூடிய பிரதேசங்களில் மற்றும் இயற்கை ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய பிரதேசங்களின் படவரைபுகள் இயற்கை வளங்கள் காணப்படும் இடங்களை காணுதல் மற்றும் புறவுரிமை பகுதிகள் ஆகியவற்றை இனங்காண்தல் போன்றவை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் இணைந்து பொறுப்பேற்கப்பட்டன. வட மாகாணத்தில் சுற்றாடல் ரீதியாக பாதிக்கக்கூடிய இடங்களை பாதிக்காத வகையிலும் அனர்த்தங்களுக்கு

முகங்கொடுக்கக்கூடிய பிரதேசங்களை தவிர்த்தும் காணப்படும் அபிவிருத்தி செய்யக்கூடிய பகுதிகள் தொடர்பான வரைபடங்கள் வடிவமைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

அபிவிருத்தியான பிரதேசங்களை காட்டும் வரைபு படம்




## 5.6 அபாய வாய்ப்பு விபர கருத்திட்டம்


அபாய வாய்ப்பு விபரமானது நாட்டில் ஏற்படும் பிரதான ஆபத்துக்களின் தாக்கம், அவை ஏற்படும் நிகழ்வுகள், மற்றும் இடங்கள் தொடர்பான நம்பகத்தன்மையுள்ள தகவல்களை திட்டமிடுவோருக்கும், நிர்மாணம் மேற்கொள்வோருக்கும் வழங்கும் நோக்கத்தை நிறைவேற்றுகின்றதுடன் தொடர்பான தகவல்களையும் வழங்குகின்றது. இந்த அறிவைப்பெற்று கொள்கைகள் உபாயங்கள் என்பவற்றை வகுத்துக்கொள்ள முடியும். அதேவேளை அபாயக்குறைப்பு காரணிகளை உள்ளடக்கி தணிப்பு தயார்நிலை மற்றும் எதிர்பாரா அவசரநிலைத்திட்டங்கள் ஆகியவற்றை விருத்தி செய்து அபிவிருத்திக் கருத்திட்டங்களில் உள்ளடக்கலாம்.

இக்கருத்திட்டத்தில் அ.மு.நி. ஐ.நா.அ.தி. கண்காணிப்பு மதிப்பீடு மற்றும் நிதியுதவியைளப் பெற்று கண்காணிப்பாளர்களை ஒருங்கிணைத்து அவசியமான தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. சம்பந்தப்பட்ட துறைசார் தொழில்நுட்ப முகவர்கள் ஒவ்வொரு அபாயத்திற்கான கருத்திட்டத்தை அமுல்படுத்துகின்றது.

| பொறுப்புக்கள் | கருத்திட்ட அமுலாக்கல் | தொழில்நுட்ப உதவி ∴ மேலதிக உதவி |
|---|---|---|
| கருத்திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனங்கள், கண்காணிப்பு பதிலீடு மற்றும் தொழில்நுட்ப உதவி | அனர்த்த முகாமைத்துவ நிலையம் | |
| கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் நிதி | ஐ.நா.அ.தி. | |
| GIS தரவுகள், பட வரைபுகள் நியமங்கள் | | அளவையியல் திணைக்களம் |
| புள்ளிவிபரவியல், அபாய குறியீடுகள் மற்றும் நியமங்கள் | அனர்த்த முகாமைத்துவ நிலையம் | புள்ளிவிபரவியல் குடிசனத் தொகை மதிப்பீட்டு திணைக்களம் |
| மண்சரிவு அபாயம் மற்றும் அபாய படவரைபும் | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) | |
| கரையோர அபாயம் மற்றும் அபாய படவரைபும் | கரையோர பாதுகாப்புத் திணைக்களம் (CCD) | பொறியியல் பீடம், போராதனைப் பல்கலைக்கழகம் |
| வெள்ள அபாயம் மற்றும் அபாய படவரைபும் | நீர்ப்பாசனத் திணைக்களம் | - |
| சூறாவளி அபாயம் மற்றும் அபாய படவரைபும் | காலநிலை அவதானிப்பு திணைக்களம் | - |
| வரட்சி அபாயம் மற்றும் அபாய படவரைபும் | கமத்தொழில் திணைக்களம் | விவசாயப்பீடம் பேராதனை பல்கலைக்கழகம் |

**2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம்**

I. கரையோர அபாய படவரைபு கருத்திட்டம்: தென்மாகாணத்திற்கான சுனாமி அபாய படவரைபு முற்றுப்பெற்றுள்ளது. இத்திட்டம் 2011 மார்ச்சு 31 ஆம் திகதியளவில் முடிக்கப்பட்டது.



உரு 01: சுனாமி அபாய படவரைபின் ஓர் பகுதி – காலி நகர கரையோரம்

II. மண்சரிவு அபாய படவரைபு: நுவரெலியா மாவட்டத்திற்கான அபாயள படவரைபு 1:10,000 அளவுத்திட்டத்தில் பூரணப்படுத்தப்பட்டது. உள்ளூர்மட்ட அபிவிருத்தி மற்றும் நிர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றுக்கு எவ்வாறு அத்தகைய அபாய படவரைபுகளை பயன்படுத்துதல் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அங்கம் கொடுத்த பிரதேச செயலாளர் பிரிவு பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய அரச முகவர்களை உள்ளடக்கி ஓர் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுது.

III. வரட்சி அபாய படவரைபு: இக்கருத்திட்டத்தின் 80% 2010 டிசெம்பர் 31 ஆம் திகதியளவில் முற்றுப்பெற்றது. இக்கருத்திட்டம் 2011 மார்ச்சு மாதமளவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

IV. சூறாவளி ஆபத்து படவரைபு: 15% முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகள் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் முடிக்கப்படவுள்ளது.

V. வெள்ள அபாய படவரைபு கருத்திட்டம்: இக்கருத்திட்டம் இன்றும் ஆரம்பிக்கப்படவில்லை. நிர்ப்பாசன திணைக்களத்துடன் கலந்துரையாடல் தொடர்கின்றது.

## 5.7 ஆசியக் காவல் முஜறமை அமுலாக்கல்

சென்டினல் ஆசியா (SA) என்பது ஆசிய பசுபிக் பிராந்திய அண்டவெளி முகவர் பேரவை (APRSAF) யால் வழிநடாத்தப்படும் தன்னார்வ முன்னெடுப்பாகும். இது ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வெப்-ஜிஜஎஸ் (Web-GIS) தொழில்நுட்பத்தையும் பூமியை கண்காணிக்கும் செயற்கை கோள் தரவு போன்ற அண்டவெளிசார் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு உதவுகின்றது.

"சென்டினல் ஆசியா" இப்பிராந்தியத்தில் பயன்படுத்தக்கூடிய உயர் தொழில்நுட்ப முன்னேற்ற சாத்தியத்தை கொண்டதாக 2004 நவம்பரில் பிரேரிக்கப்பட்டதுடன் அனர்த்தம் தொடர்பான தரவுகள் மிகவும் இலகுவில் இணையத்தினூடாக பெற்றுக்கொள்ளவும் முடியும். ‘‘சென்டினல் ஆசியா’’ (SA) வின் பிரதான நோக்கங்களை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

- “ICT மற்றும் அண்டவெளி தொழில்நுட்பத்தின் மூலமாக சமுதாயத்தில் வாழ்க்கைக்கு முதலிடம்’’ எனும் சமுதாயங்களை நிர்மாணித்தல்.
- அனர்த்த தயார்நிலை மற்றும் முன்னெச்சரிக்கை ஆகியவற்றின் வேகத்ததையும் நம்பகத்தன்மையையும் மேம்படுத்தல்.
- அனர்த்தங்கள் மூலமாக தாக்குதலுக்குள்ளாகும் மக்களையும் சமூக பொருளாதார இழப்புக்களை குறைத்தல்.

### 5.7.1 சென்டினல் ஆசியா முறைமை பயிற்சி

ஐந்தாவது சென்டினல் ஆசியா முறைமை செயற்பாடுகள் பயிற்சி 2010 பெப்ரவரி 22 – 26 வரை கொழும்பில் நடாத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு ஜப்பான் அண்டவெளி ஆய்வு முகவர் (JAXA), அ.மு.நி. மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆகியவைகள் இணைந்து அனுசரணை வழங்கின. 11 நாடுகளை சேர்ந்த 19 சர்வதேச நபர்கள் உட்பட 33 நபர்கள் பங்குபற்றினர்.



5ம் சென்டினல் முறைமை அமுலாக்கல் பயிற்சியில் ஈடுபட்ட நபர்கள் - கொழும்பு


### 5.7.2 செயற்கை கோள் கண்காணிப்பிற்கான அவசர வேண்டுகோள்

அவசரகால நிலைமைகளில் செயற்கைகோள் படங்கள் தொடர்பான வசதிகளை தேவைப்படின் அவற்றை ஜப்பான் அண்டவெளி ஆய்வு முகவர் (JAXA) சென்டினல் ஆசியா மற்றும் ADRC (ஆசிய அனர்த்த அபாய குழு) இணைந்து வழங்குகின்றது. 2010 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தொடர்பாக இரண்டு வெற்றிகரமான செயற்கைகோள் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அவதானிப்பு 1: கொழும்பு மற்றும் கம்பஹா வெள்ளம் 2010 மே 19.

அவதானிப்பு 2: வடமாகாண வெள்ளம் 2010 டிசெம்பர் 10

இவ்விரு அனர்த்தங்களின் போதும் அ.மு.நி. தனது வேண்டுகோளுக்கு இணங்க செயற்கை கோள் படங்களை 48 மணித்தியாலத்திற்குள் பெற்றுக்கொண்டதுடன் அவற்றின் உதவியுடன் வெள்ளம் தேங்கிய இடங்க்ள தொடர்பான படவரைபு மேற்கொள்ளப்பட்டு அவை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அனுப்பிவைத்தது.




கம்பஹா மாவட்ட வெள்ளத் தேக்கம் தொடர்பாக அலொஸ் பல்சர் (Alos Palsar) டாரார் படங்கள் மூலமாக உருவாக்கப்பட்ட படவரைபு. 2010 மே 19 இல் கிடைக்கப்பெற்றது. SAS நடவடிக்கைகளின் கீழ் JAXA ஆல் வழங்கப்பட்ட மூலத்தரவுகள்.

### 5.7.3 சென்டினல் ஆசியா விண்ட்ஸ் (WINDS) முறைமை தாபித்தல்

ஆசிய பசுபிக் பிராந்தியம் தகவல் தொடர்பாடல் தொடர்பாக இன்னும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றது. அத்துடன் இப்பிரச்சினை சில சென்டினல் ஆசிய நாடுகளில் மிகவும் உயர்வாகக் காணப்படுகின்றது. காரணம் இவை அனர்த்த தகவல்களை தனது செயற்பாட்டிலிருந்து பயன்படுத்தும் வேளையில் குறுகிய – பட்டை பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். ஆசிய பிராந்தியத்தில் குறுகிய பட்டை (narrow-band) பயன்படுத்தி சென்டினல் ஆசியா மூலமாக அனர்த்த தகவல்களை பெற்றுக்கொள்வோரின் நன்மைக்காக இணையம் மற்றும் பொறிமுறை கட்டமைப்புக்களுக்கு இடையிலான அகலப்பட்டை மற்றும் செயற்கை கோள் செய்முறை (WINDS) SA 2 முறை ‘‘பிராந்திய சேவர்’’ (Regional Server) மற்றும் ‘‘க்லய்ன்ட் டெர்மினல்’’ (Client Terminal) எனப்படும் உள்ளூர் தகவல்களை வழங்குகின்றது. இவை அனர்த்தத் தகவல்களை இணையம் மற்றும் விண்ட்ஸ் மூலமாக பெற்றுக்கொள்வோர்களுக்கு பரிமாற்றம் செய்கின்றது. அத்துடன் அனர்த்த தகவல்களை விரைவாக பயன்படுத்தவும் உதவுகின்றது. இவ்வுபகரணம் தாபித்தல் அ.மு.நி. வேறொரு இடத்திற்கு இடம்பெயருவதால் 2011 ஜனவரி வரை பிற்போடப்பட்டுள்ளது.

## 5.8 ICT கொள்கை அ.மு.நி. அமுலாக்கல்

ICT கொள்கை அமுலாக்கலின் கீழ் ICT யினள் சீரான நடவடிக்கைகளையும் ICT யின் உபகரணங்களின் பாவனையை உறுதிப்படுத்தவும் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**5.8.1** மத்தியமயமாக்கப்பட்ட சேவர் கட்டுப்பாட்டு வசதியை வழங்கி கணினிக்கட்டமைப்பு முறையை மேம்படுத்தல்.

**5.8.2** மத்தியமயமாக்கப்பட்ட கட்டுப்பாடு மற்றும் முறையான கண்காணிப்பு சலுகையுடன் வைரஸ் எதிர்ப்பு நடவடிக்கையை மேம்படுத்தல்.

**5.8.3** ICT கொள்கை அமுலாக்கலை நடைமுறைப்படுத்தும் முகமாக செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரிக்கவும் முன்னுரிமைகளை இனங்காணுதலும்.

**5.8.4** ICT இயலளவை கட்டியெழுப்பும் முகமாக அ.மு.நி. பணியாட்களை உட்படுத்தி ஒரு ஆண்டுப்பயிற்சித் திட்டத்தை தயார் செய்தல் தொடர்பாக மதிப்பீட்டை மேற்கொள்ளல்.

## 6. பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வுப் பி ரிவு

### *6.1 பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வுப் பிரிவு*

பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வுப் பிரிவானது உள்ளக பணியாட்கள், பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள், அரச மற்றும் அரசு சாராத பங்குதாரர்கள் ஆகியோருக்கு பயிற்சியையும் வழிப்புணர்வு செயல்முறைத் திட்டங்களையும் நடாத்தும் கடப்பாட்டை கொண்டுள்ளது. பெரும்பான்மையான செயற்திட்டங்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் ஏனைய அரச மற்றும் அரசு சாரா பங்குதாரர்களினதும் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நடாத்தப்பட்டது.

### *6.2 விழிப்புணர்வைத் தூண்டும் உபகரணங்களின் அபிவிருத்தி*

அனர்த்த அபாயத்தணிப்பு (அ.அ.த.) தொடர்பாக கிடைக்கக்கூடியதாகவுள்ள விழிப்புணர்வை தூண்டும் உபகரணங்களாவன அனர்த்த அபாயத் தணிப்பு உபகரணங்களை அபிவிருத்தி செய்யும் முகவர்களிடமிருந்து பெறப்பட்டதுடன் தேவையானவையும் இனங்காணப்பட்டன. உபகரணங்கள், தேவையின் அடிப்படையில் தொழில்நுட்ப முகவர்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்யப்பட்டன. இவை மண்சரிவு மற்றும் வெள்ளம் தொடர்பான விழிப்புணர்வை தூண்டும் ஓர் புத்தகத்தையும் சித்திரங்கள் அடங்கிய புத்தகமொன்றையும் உள்ளடக்குகின்றன.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான மேலதிக வாசிப்புப் புத்தகங்கள் தேசிய கல்வி நிறுவனம் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்ப முகவர்கள் ஆகியோரின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கான நிதியுதவி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் வழங்கப்பட்டது.

### *6.3 நடமாடும் பயிற்சிப் பிரிவு*

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிதியுதவியுடன் இலங்கை முழுவதும் வியாபித்துள்ள சனநடமாட்டம் அதிகமாகவுள்ள பொது இடங்களிலும் கண்காட்சிகளிலும் காட்சிப்படுத்துவதற்கான வீடியோ மேடை மற்றும் ஒலி வசதிகளுடையதான ஓர் நடமாடும் பயிற்சிப் பிரிவு அபிவிருத்திக்குச் செய்யப்பட்டது. நடமாடும் பயிற்சி வாகனம் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்புடைய மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்டது.

| | மாவட்டம் | நிகழ்ச்சிநிரல் | திகதி |
|---|---|---|---|
| 1. | இரத்தினபுரி | இரத்தினபுரியில் கண்காட்சி | 2010 செப்டெம்பர் 18 – 19 |
| 2. | குருநாகல் | அலவ்வையில் கண்காட்சி | 2010 ஒக்டோபர் 13 – 17 |
| 3. | கம்பஹா | நீர்கொழும்பில் கண்காட்சி | 2010 ஒக்டோபர் 27 – 28 |
| 4. | பதுளை | பதுளையில் கண்காட்சி | 2010 ஒக்டோபர் 30 – 31 |
| 5. | களுத்துரை | களுத்துரையில் கண்காட்சி | 2010 நவம்பர் 22 – 28 |

### *6.4 எதிர்வரும் பருவமழை காலத்திற்கான தயார்படுத்தல் செயலமர்வுகள்*

பருவமழை காலத்திற்கு தகுந்த முறையில் முகம்கொடுக்கும் முகமாக தொடர்புடைய முகவர்களுக்கு இயக்கவேண்டிய தயார்நிலை மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக இரண்டு செயலமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டது. அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிரதேசங்களை சேர்ந்த பல்வேறு முகவர்களைச் சேர்ந்த புற உறுப்பினர்களை உள்ளடக்கியவாறு முதலாவது செயலமர்வு 2010 செப்டெம்பர் 24ஆம் திகதியிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் மாவட்ட பல்வேறு முகவர்களைச் சேர்ந்த 30 உறுப்பினர்களை உள்ளடக்கியவாறு இரண்டாவது செயலமர்வு 2010 ஒக்டோபர் 01ஆம் திகதி வவுனியாவிலும் நடைபெற்றது.

### *6.5 "அரச நோய்த்தடுப்புத் தயார்நிலை மற்றும் பதிலிறுப்பு நடவடிக்கைத் திட்டம்" இதன் ஓர் பகுதியான "எதிர்பாரா நிகழ்வுகளுக்கான அத்தியாவசிய சேவைகள் மேம்பாட்டை திட்டமிடல்" பங்குதாரர்களுக்கான கூட்டம்.*

நாட்டில் AH1N1 என்ற பெருவாரியாக பரவியிருந்தமை இனங்காணப்பட்டமையானது அனைத்து பங்குதாரர்களிடையேயும் விஷேடமாக பல்வேறு துறைகளுடனான சிறந்த இணைப்பையும் பதிலிறுப்பு நடவடிக்கை கட்டமைப்பையும் பல்துறைத் திட்டமிடல் மற்றும் ஒத்துழைப்பையும் கொண்டிருக்க வேண்டிய அவசியத்ததை சுட்டிக்காட்டியது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் உலக சுகாதார நிறுவனத்தின் (உ.சு.நி) வேண்டுகோளின் அடிப்படையில் முறைமையை மேம்படுத்தும் முகமாக சுகாதாரத் துறைக்கு புறம்பாகவும் இலங்கை அத்தியாவசிய சேவைகளிலிருந்து நபர்களை உள்ளடக்கி பங்குதாரர்களின் கூட்டத்தைக்கூட்ட ஏற்பாடு செய்தது. இக்கூட்டம் பல்தரப்பட்ட துறைகளுக்கிடையில் நடைமுறையில் காணப்படும் ஒருங்கிணைப்புத் தன்மையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பாகவும் அத்தியாவசிய

சேவைகளில் ஓர் திட்டம் அலுவல் தொடர் திட்டத்தை தாபித்தல் தொடர்பான விழிப்புணர்வை பங்குபற்றியோரிடையே ஏற்படுத்தியது. இதன் இறுதியான நோக்கமானது AH1N1 போன்ற நோய்பரவும் தன்மை தோன்றும் அவசரகால நிலைமைகளில் நடைமுறைப்படுத்தக் கூடிய அத்தியாவசிய சேவைகளின் எதிர்பாராத

நிகழ்வுகளுக்கான திட்டத்தை தயார் செய்தலாகும். இக்கூட்டம் 13 துறைகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் 2010 ஒக்டோபர் 21ஆம் திகதி நடைபெற்றது.

### *6.6 தேசியமட்ட பயிற்சித்திட்டம்*

### *6.7 மாவட்ட முன்னேற்றம்*

| பயிற்சி மொடியுள் | இலக்குக் குழு | நாட்களின் எண்ணிக்கை | திகதி | பங்கு பற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவ வலுவூட்டல் பயிற்சி | அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவி ஒருங்கிணைப்பாளர்கள் | இரண்டு இரண்டு நாள் பயிற்சி | 1) 2 , 3 டிசெம்பர். 2010<br>2) 9, 10 டிசெம்பர். 2010 | 54 |
| UNDP, ADPC மற்றும் ஆசியா பவுண்டேஷன் ஆகியவற்றின் உதவியுடன் “அனர்த்தங்களுக்கு உட்படும் பிரதேசங்களுக்கான கட்டுமான வழிகாட்டிகள்” | கிழக்கு மாகாண பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் | இரண்டு 03 நாள் பயிற்சிகள் | 17 – 19 மே 2010<br>30 ஆகஸ்ட் – 1 செப்டெம்பர் 2010 | 64 |
| தகவல்தள வழி | அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட்கள் | 05 நாட்கள் | செப்டெம்பர் 2010 | 06 |
| இலங்கை நிர்வாக சேவைகள் (SLAS) / இலங்கை திட்டமிடல் சேவைகள் (SLPS) அதிகாரிகள் தொடர்பான பயிற்சி | இ.நி.சே. மற்றும் இ.தி.சே. பயிலுனர்கள் | இரண்டு 03 நாள் பயிற்சிகள் | மார்ச் 2010 | 08 |

| | | | | |
|---|---|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவ<br>ஆதிகால முதலீடு | பாடசாலை மாணவர்கள் மற்றும்<br>உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் | 5 நாட்கள்<br>01 நாள் | 5 – 9 ஜூலை 2010<br>31 மார்ச் 2010 | 106<br>500 |
| | ஆசிரியர்கள் | 120 | | |
| தமிழ் மொழி தராதரப்பத்திர பாடநெறி கொழும்பு பல்கலைக்கழகம் | அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாளர்கள் | மணித்தியா ளங்கள் (கிழமையில் 2 மணித்தியா லங்கள்) | தொடர்கின்றது | 24 |
| UNDP உதவியுடன் சம்பவ ஆணையிடல் முறை | மட்டக்களப்பு, திருகோணமலை, பொலன்னறுவை மாவட்ட சிரேஷ்ட அலுவலர்கள் | 8 நாட்கள் உள்ளடங்கிய 2 பயிற்சிகள் | 1) 20 – 23 ஜூலை 2010<br>2) 17 – 20 ஆகஸ்ட் 2010<br>14 – 17 செப்டெம்பர். 2010 | 74 |
| ஐக்கிய அமெரிக்க தூதுவராலய உதவியுடன் அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் செயலமர்வு | அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாளர்கள், பங்குதாரர் முகவர்களின் பணியாட்கள் | 5 நாட்கள் உள்ளடங்கிய 3 பயிற்சிகள் | 1) 15 – 19 பெப்ரவரி. 2010<br>2) 22 – 26 பெப்ரவரி 2010<br>3) 20 – 24 செப்டெம்பர். 2010 | 25<br>25<br>43 |
| வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் செயலமர்வுகள் | அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாளர்கள் | | | 14 |
| அனர்த்த முகாமைத்துவ பயிற்சியாளர்க ளுக்கான பயிற்சிநெறி | தெரிவுசெய்யப் பட்ட நபர்கள் | 3 நாட்கள் உள்ளடங்கிய 3 பயிற்சிகள் | 10 – 12 பெப்ரவரி 2010 | 25 |
| UNDP ஒத்துழைப்புடன் பாதுகாப்பான வாகனம் ஓட்டும் மற்றும் முதலுதவி பயிற்சி | மேல்மாகாண பாடசாலை வேன் மற்றும் தனியார் பஸ் சாரதிகள் | 1 நாள் | 20 மார்ச் 2010 | 300 0 |
| பாதுகாப்பு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு பயிற்சி | அ.மு.நி. (EOC) மற்றும் (மா.அ.மு.ஒ.கு) பணியாட்கள் | 3 நாட்கள் உள்ளடங்கிய 3 பயிற்சிகள் | 1) 2 – 4 ஆகஸ்ட் 2010<br>2) 12 – 14 ஆகஸ்ட் 2010<br>3) 16 – 17 ஆகஸ்ட் 2010 | 20 |

பயிற்சி மற்றும் மாவட்ட விழிப்புணர்வு செயற்பாடுகள் 2010

| | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | காலி | மாத்தறை | ஹம்பாந்தே | புத்தளம் | அம்பாறை | கண்டி | இரத்தினபுரி | குருநாகல் | பதுளை | மொனராகலை | நுவரெலியா | மாத்தளை | மட்டக்களப் | கிளிநொச்சி | வவுனியா | முல்லைத்தீ | யாழ்ப்பாண | கேகாலை | பொலன்னறு | அநுராதபுரம் | மன்னார் | திருகோண | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| | விழிப்புணர்வு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 1 | சமூக விழிப்புணர்வு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2 | பாடசாலை விழிப்புணர்வு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 3 | அரச அதிகாரிகள் விழிப்புணர்வு (கி.சே.பிரிவுகள், மாவட்ட செயலகம்) | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 4 | பொலிஸ் அதிகாரிகள் விழிப்புணர்வு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 5 | ஆயுதப்படை, இராணுவப்படை, கடற்படை, விமானப்படை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 6 | சுகாதாரத்துறை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 7 | உள்ளூராட்சி சபைகள் நகர, மாநகர சபைகள் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 8 | அரசியல் அதிகாரசபை, பிரதேச சபை, மாகாண சபை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 9 | தனியார் துறை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 10 | ஏனைய (அ.சாரா நிறு) | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | பயிற்சி மற்றும் பயிற்சிப்பட்டறை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 1 | தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2 | முதலுதவி | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 3 | தலைமைத்துவம் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 4 | தீயணைத்தல் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 5 | முகாம் முகாமைத்துவம் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 6 | கிராமிய பாதுகாப்பு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 7 | டெங்கு நோய் தடுப்பு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 8 | அனர்த்த பாதுகாப்பு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பொறிமுறை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 9 | அபாய படவரைபு | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 10 | ஏனையவை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

## *7 தயார்படுத்தல், திட்டமிடல் பிரிவு*

### *7.1 அறிமுகம்*

அனர்த்த முகாமைத்துவ சட்டம் மற்றும் அதன் பிரதான பணிகளில் ஒன்றிக்கிணங்க தயார்படுத்தல் திட்டமிடல் பிரிவானது அனைத்து மாவட்டங்களுக்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய கிராம சேவகர் பிரிவுகளுக்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் தேவையான அனர்த்த தயார்படுத்தல் மற்றும் பதிலிறுப்பு நடவடிக்கைகள் திட்டங்களை தயார் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

அனர்த்த முகாமைத்துவ திட்டமென்பது அனர்த்தங்களுக்கு பதிலளிப்பது தொடர்பாக தாபிக்கப்பட்ட மாகாண ரீதியான பொறிமுறையை விளக்கும் ஓர் வழிகாட்டி ஆவணமாகும். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுக்கள் (மா.அ.மு.ஒ.கு) மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ விடயங்களை ஆய்வு செய்வதற்காக அனர்த்தத்திற்கு முன்னரான கட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அவை அனர்த்த சூழ்நிலைகளில் பதிலிறுப்பு செயற்பாடுகளை ஒருங்கமைப்பு செய்கின்றன. இக்குழு அனைத்து பங்குதாரர்களையும் அரசுசார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் ஏனையோரையும் உள்ளடக்குகின்றது. இவ்வுறுப்பினர்களிடம் அபாய முன்னறிவித்தல், தேடுதல் காப்பாற்றுதல் மற்றும் முகாம் முகாமைத்தவம் போன்ற பல்வேறு பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன. பல்வேறு பணிகளுக்காக உபகுழுக்களும் நியமிக்கப்படுகின்றன. இத்திட்டம் அனைத்து உபகுழுக்களினதும் வகிபங்குகளையும் பொறுப்புக்களையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.


### *7.2 தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை மற்றும் தேசிய அவசர நடவடிக்கைகள் திட்டம்*

2010 ஜனவரி மாதத்தில் தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை தயாரித்தல் முற்றுப்பெற்றது. 2010 திசெம்பர் 28ஆம் திகதி நடைபெற்ற குழுக்கூட்டத்தில் அக்கொள்கை அங்கீகரிக்கப்பட்டது. தேசிய அவசர நடவடிக்கைகள் திட்டத் தயாரித்தல் (தே.அ.ந.தி) 2010 செப்டெம்பரில் ஆரம்பிக்கப்பட்டு தே.அ.ந.தி. நகல் வரைபு பணிச்சட்டம் முற்றுப்பெற்றுள்ளது.

## 7.3 *மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயாரிப்பு*

அனர்த்த முன்னேற்பாட்டுத் திட்டமானது ஓர் அனர்த்தம் நடைபெற்றால் அல்லது நடைபெறும் போது மாவட்டப் பொறிமுறை எவ்வாறு அவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டும் என்பது தொடர்பான விபரங்களை வழங்கும் முக்கியமான ஓர் ஆவணமாகும். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுவே மாவட்டத்தின் பிரதான முகாமைத்துவ கட்டமைப்பாகும். இத்திட்டத்தில் குழு உறுப்பினர்களினதும் உபகுழு உறுப்பினர்களினதும் வகிபாகங்களும் பொறுப்புக்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டங்கள் நிர்வாகப் பிரதேசத்தின் தளத்தரவுகள், பிரதேசத்தில் நிகழக்கூடிய அபாயம் ஆபத்து தொடர்பான மதிப்பீட்டையும் முக்கிய இடங்களின் தொடர்பு விபரங்களையும் பிரதேசத்தில் காணப்படும் வனங்கள் தொடர்பான விபரங்களையும் மற்றும் அனர்த்த பதிலிறுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்களின் பொறுப்புக்களையும் உள்ளடக்குகின்றன.

2010ஆம் ஆண்டில் அநேகமான மாவட்டங்களுக்கான அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டன. (பதுளை, மாத்தளை மற்றும் நுவரெலியா) 2010ஆம் ஆண்டு இறுதியில் 16 மாவட்டங்களுக்கான திட்டங்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவை அனர்த்த சூழ்நிலையில் பயன்படுத்தும் முகமாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களுக்கு விநியோகப்படுத்தப்பட்டுள்ளன. மொனராகலை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக் கான இறுதித் திட்டங்களின் நகல்வரைபு இறுதி பிழைகள் திருத்தப்படும் நிலையில் தயாராகவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திற்கான அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தொடர்பான ஆரம்ப புரிந்துணர்வு செயலமர்வு 2010 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்டது அதன் நகழ் திட்டமும் தயாராகவுள்ளது.




**நுவரெலியா, பதுளை மற்றும் மாத்தளை மாவட்ட திட்டங்கள்**

### 7.3.1 *பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள்*

12 மாவட்டங்களில் நாற்பது பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் செயலமர்வுகள் நடாத்தப்பட்ட. 09 பிரதேசத் திட்டங்களின் அச்சிடல் செயற்பாடுகள் முற்றுப்பெற்றுள்ளன. 2010 ஆண்டின் இறுதியளவில் மொத்தமாக 226 ஆரம்பச் செயலமர்வுகள் மற்றும் 80 இறுதிச் செயலமர்வுகள் பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயார்படுத்தல் தொடர்பாக நடத்தப்பட்டுள்ளன.

### 7.3.2 *கிராம சேவைகள் மட்ட முன்னேற்பாட்டுத் செயற்பாடுகள்*

மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய கிராம சேவகர் பிரிவுகளுக்கான முன்னேற்பாட்டு செயற்பாடுகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளால் நடாத்தப்பட்டுள்ளன.:

- அபாயம், ஆபத்துக்களை அடையாளம் காணல், முன்னெச்சரிக்கை போன்ற செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு
- அனர்த்த முகாமைத்தவக் குழுக்கள் மற்றும் உபகுழுக்கள் அமைத்தல் போன்றவை
- அபாயப்பகுதிகள், பாதுகாப்பான இடங்களுக்கான வழிகள் போன்றவற்றை தெளிவாகக் காட்டும் சமுதாய மட்ட நிலப்படங்கள்
- தேடுதல், காப்பாற்றுதல், முதலுதவி மற்றும் முகாம் முகாமைத்துவம் போன்றவற்றில் பயிற்சியளித்தல்.
- பாரிய ஒலிபெருக்கிகள், பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் வழிமுறைகள், அபாய அறிவிப்பு சங்குகள் மற்றும் மழை வள்ளங்கள் போன்ற முன்னெச்சரிக்கை பரப்பும் உபகரணங்களை வழங்குதல்.
- ஒத்திகைகள் நடாத்துதல்

2010ஆம் ஆண்டு இறுதியளவில் ஆரம்ப செயலமர்வுகள் 1216 மற்றும் இறுதிச் செயலமர்வுகள் 360 ஆகியவை கிராம சேவையாளர் மட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயாரித்தல் தொடர்பில் நடாத்தப்பட்டுள்ளது.




***அம்பாந்தோட்டை மாவட்ட ரேகூவா கிராம சேவைப் பிரிவு அபாய நிலற்பட நிகழ்ச்சித்திட்டம்***

### ***7.3.3 பாரிய நீர்த்தேக்கங்களுடன் தொடர்புடைய அனர்த்தங்களுக்கான முன்னேற்பாட்டு செயற்பாடுகள்.***

1. புயல் காற்றுக்கால அல்லது நிலநடுக்கம் காரணமாக பாரிய நீர்த்தேக்கங்களுக்கு ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் மூலமாக பாரிய நீர்த்தேக்கங்களுக்கு அருகாமையில் வாழும் சமுதாயங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆரம்ப முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இது நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தும் நீர்த்தேக்கம் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் கருத்திட்டத்தின் ஒரு நடவடிக்கையாகும்.

2. முன்னேற்பாட்டுத் திட்டமிடல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 16 பாரிய நீர்த்தேக்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நீர்த்தேக்க பாதுகாப்பு கருத்திட்டத்தின் சாத்தியக்கூற்றுக் கட்டத்தின் கீழ் அடிப்படை நீர் மூழ்கக்கூடிய பகுதிகளின் நிலற்படங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ நிலையம் இந்நிலற்படங்களின் உதவியுடன் பாதிப்புக்குள்ளாகக்கூடிய கிராம சேவகர் பிரிவுகளை இனங்கண்டது. அத்துடன் சில திட்டங்களுக்காக விபரமான நிலற்படங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் நாச்சடுவ, ரன்தெனிகள மற்றும் சமனலவெவ பகுதிகளில் ஆரம்ப முன்னேற்பாட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. டவுன் ஸ்டிரீம் (Down Stream) நீர்வள முகாமைத்துவ கருத்திட்ட துறைசார் நிபுணர்கள் நாச்சடுவ நீர்ப்பாசன குளத்திற்கான அவசர செயற்பாட்டுத் திட்டத்தை (EAP) தயாரித்துள்ளனர். அனர்த்த முகாமைத்துவ நிலையம் திட்டம் தொடர்பான இறுதிமுடிவை எடுக்கும் முன்னர் தனது கருத்தை தெரிவித்துள்ளது.

### 7.3.4 பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

கல்வி அமைச்சு அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் ஜீ.அய்.இசட் (GIZ) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் அனர்த்த பாதுகாப்பு பாடசாலை சமூகங்களை தாபிப்பதாகும். பாடசாலை அனர்த்தப் பாதுகாப்பு தொடர்பான கைநூலொன்று சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்டது. இக்கைநூல் அனைத்து கல்வி வலயப் பிரிவுகளிலும் விநியோகிக்கப்பட்டுள்ளது. பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் வட மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களிலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர்கள் மூலமாக ஒருங்கிணைக்கப் படுகின்றது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய செயற்பாடுகளானவை பாடசதலை அபாய நிலற்படம் தயாரித்தல், பாடசாலை அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் மற்றும் உப குழுக்களை அமைத்தல். ஒத்தகை செயற்பாடுகளை நடாத்துதல், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சியளித்தல் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள், வள்ளங்கள் போன்றவற்றை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.




*பாடசாலை அனர்த்த பாதுகாப்பு தேசிய வழிகாட்டிப் புத்தகம்*

### 7.3.5 உள்ளூர் அதிகார சபைகளின் அனர்த்த பதிலிறுப்பு இயலுமையை மேம்படுத்தல் / உள்ளூர் அதிகாரசபைகளுக்கு உபகரணங்களை கொள்வனவு செய்து விநியோகித்தல்.

அனர்த்த தணிப்பு மற்றும் பதிலிறுப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளின் தேவைகளை ஈடுசெய்யும் முகமாக பொறுத்தமான பொறிகளையும் உபகரணங்களையும் வழங்குதல். 2010ஆம் ஆண்டில் ஆறு மோட்டார் படகுகள் மற்றும் 50 வள்ளங்கள் கொள்வனவு செய்யப்பட்டு களுத்துரை மாவட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு வழங்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் 200 தீயணைப்பு உபகரணங்களை கொள்வனவு செய்து அவற்றை மா. அ. மு. ஒ. அலகின் மூலமாக பல்வேறு மாவட்டங்களுக்கு

விநியோகித்து தீ அனர்த்தம் ஏற்படும் ஆபத்துள்ள பிரதேசங்களாக இனங்காணப்பட்டு அங்கு தாபிக்கப்படட்ட குழுக்களின் மூலமாக கண்டிக்கு 40 தீயணைப்பு உபகரணங்களும், காலிக்கு 40 உபகரணங்களும் மாத்தரைக்கு 40 உபகரணங்களும் கொழும்புக்கு 40 உபகரணங்களும் மற்றும் கேகாலைக்கு 40 உபகரணங்களும் விநியோகிக்கப்பட்டன. இதற்கு புறம்பாக 9 பாடசாலைகளுக்கும் மா.அ.மு.ஒ.அ. இன் மூலமாக தீயணைப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அனர்த்த சூழ்நிலைகளின் போது சிரமமில்லாது இனங்காண்பதற்காக அ.மு.நி. பணியாட்களுக்கு 500 பாதுகாப்பு கவச உடைகளும் வழங்கப்பட்டன.




தீயணைப்பு உபகரணம்



அ.மு.நி. பாதுகாப்பு கவச உடை

### 7.3.6 *நிலநடுக்கம் / பூகம்பம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்*

உலகளாவிய ரீதியாக அதிகரித்துவரும் நிலநடுக்க சம்பவங்களை கருத்திற் கொண்டு அ.மு.நி. மொரடுவை பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் பூகம்ப விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை 2010ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் ஆரம்பித்து பூகம்பம் ஏற்படும் சூழ்நிலையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு தொடர்பான துண்டுப்பிரசுர மொன்று மாணவர்களுக்காக வடிவமைக்கப்படுகின்றது.

## 7.4 *2010 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஏனைய கருத்திட்டங்கள்*

### 7.4.1 KOICA கருத்திட்டத்தின் கீழ் நன்கொடையாக வழங்கப்பட்ட உபகரணங்கள்

களுத்துரை மாவட்ட உள்ளூர் அதிகாரசபைகளுக்கு பின்வரும் பொறிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் தீயணைப்பு வாகனம் ஒன்று கொழும்பு தீயணைக்கும் நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

1 அகலவத்தை – மோட்டார் கிறேடர்

அகலவத்தை வலன்லவிட டொடன்கொட மற்றும் பேருவளை ஆகியவற்றிற்கு ட்ரக்டர்கள் 4 (Tractors)

வலள்லவிட பெகோ இயந்திரம் 1 (Backhoe)

அகலவத்தை மற்றும் வலள்லவிட ஆகியவற்றிக்கு ட்றம் டறக் வண்டிகள் 2 (Dump Trucks)

கொழும்பு தீயணைப்பு நிலையத்திற்கு தீயணைப்பு வண்டி 5 (Truck)

**அட்டவணை 1:** நிகழ்ச்சித்திட்ட நிதியியல் மற்றும் பௌதீக முன்னேற்றச் சுருக்கம் / முன்னேற்பாட்டு திட்டப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டப் பெயர் | ஒதுக்கப்பட்ட நிதி மில்லியன் | செலவினம் ரூபா. மில்லியன் | பௌதீக முன்னேற்றம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| முன்னேற்பாட்டு திட்டத்திற்கு உதவிய அரச முகவர்கள் | 5.0 | 4.61 | விபரங்களுக்கு அட்டவணை 2ஐ பார்க்கவும் | |
| உள்ளூர் அதிகாரசபைகளின் அனர்த்த பதிலிறுப்பு நடவடிக்கை மேம்பாடு | 10 | 9.99 | 100% முற்றுப் பெற்றுள்ளது. | மோட்டார் வள்ளம் -6<br>வள்ளங்கள் -50 |
| அனர்த்த முன்னேற்பாடு மற்றும் முன்னெச்சரிக்கைக்கான உபகரண கொள்வனவு | 1.0 | 1.00 | 500 ஜக்கட் | கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. |
| | | | 200 தீயணைப்புக் கருவிகள் | கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. |

**அட்டவணை 2:** முன்னேற்பாட்டு திட்டமிடல் பிரிவினால் மாவட்ட மட்டத்தில் 2010 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| இல | செயற்பாடு | மாவட்டம் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அம்பாறை | அநுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | கொழும்பு | காலி | கம்பஹா | ஹம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | களுத்துறை | கண்டி | கேகாலை | கிளிநொச்சி | குருநாகல் | மன்னார் | மாத்தளை | மாத்தறை | மொனராகலை | முல்லைத்தீவு | நுவரெலியா | பொலன்னறுவை | புத்தளம் | இரத்தினபுரி | திருகோணமலை | வவுனியா | மொத்தம் |
| | **அனர்த்த முகாமைத்துவ திட்டம் தயாரிப்பு** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 1 | மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டம் அச்சடித்தல் | | | 1 | | | | | | | | | | | | | 1 | | | | 1 | | | | | | |
| 2 | பிரதேச ஆரம்ப செயலமர்வு | | | | | 1 | 2 | 2 | | | 2 | | 1 | | 2 | | | 2 | | | | | | | | | 12 |
| 3 | பிரதேச இறுதிச் செயலமர்வு | | | | | 3 | | 2 | | | | 2 | | | 2 | | 2 | 3 | | | | 2 | 4 | 3 | | | 23 |
| 4 | கிராம சேவகர் மட்ட முன்னேற்பாட்டு செயலமர்வு | 13 | | 7 | | 5 | | 1 | | | | 5 | 3 | | 11 | | | | 5 | | 3 | | | 20 | | | 73 |
| 5 | கிராம சேவகர் பிரிவுகளில் ஒத்திகைகள் நடாத்துதல் | | | | 10 | 4 | 18 | | 12 | | | 5 | | | | | 1 | 20 | | | | | | | 8 | | 78 |
| 6 | பாரிய அணைக்கட்டுக்களின் நீர் பாய்ச்சல் தொடர்பான கிராம சேவையாளர் திட்டம் தயாரித்தல் | | 2 | | | | | | | | | | | | | 1 | | | | | | | | 1 | | | 4 |
| 7 | பாடசாலை அனர்த்த பாதுகாப்பு நிகழ்ச்சிநிரல் | | | 8 | | | | | | | | | | | | | | | | | | | | | | | 8 |
| 8 | பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | | | | | | | | | | | | | | | | | | 12 | | | | | | | | 12 |

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | வைத்தியசாலை அனர்த்த ஒத்திகைப் பயிற்சி | | | 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 |
| 10 | மின்னல் அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்ச்சிப் பயிற்சி | | | | | | | | | | | | 1 | | | | 1 | | | | | 1 | | | | | 3 |
| 11 | காட்டுத்தீ தொடர்பான விழிப்புணச்சிப் பயிற்சி | | | | | | | | | | | | | | | | 1 | | | | | | | | | | 1 |
| 12 | இயலுமை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | | | | | 1 | | | | | | | | | | | 1 | | 7 | | 1 | 1 | | | | | 1<br>1 |
| 13 | **தேசிய பாதுகாபட்பு தின நிகழ்ச்சித்திட்டம்** | | | | | | | | | 1 | | | | | | | | | | | | | | | | | 1 |
| 14 | டெயட கிருள கண்காட்சி | | | | | | | | | | | | | | | | | | 1 | | | | | | | | 1 |

## 8. அவசர நடவடிக்கைகள் நிலையம்

### *8.1 அறிமுகம்*

அவசர நடவடிக்கைகள் நிலையம் (அ.ந.நி.) 2006 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டு கிழமையில் ஏழு நாட்களும் தினமும் 24 மணித்தியாலங்கள் இயங்குகின்றது. அவசர நடவடிக்கை நிலையம் சம்பவிக்கக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை தொழில்நுட்ப முகவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது. அ.மு.நி. இயற்கை மற்றும் மனிதர்களால் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை நாட்டின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் பெற்று பராமரித்து வருவதுடன் அவை தொடர்பான தினசரி நிலைமை அறிக்கையை தயாரித்து அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அமைச்சிற்கும் வழங்குகின்றது. இயற்கை அல்லது மனித அனர்த்தங்கள் ஏற்படும் சூழ்நிலையில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அவசர பதிலிறுப்பு நடவடிக்கைகளை செய்தல் வளங்களை நகர்த்துதல் மற்றும் அவசர நிவாரணங்கள் வழங்குதல் தொடர்பாக பொலீஸ், ஆயுதப்படை மற்றும் ஏனைய பங்குதாரர்களின் உதவியையும் பெற்று மக்களை வெளியேற்றுதல் மற்றும் வினைத்திறன் மிக்கதுமான நிவாரணப் பொருட்கள் விநியோகம் ஆகியவற்றை உறுதிசெய்வதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அனர்த்த அவசர பதிலிறுப்பு நடவடிக்கைகள் மற்றும் நிவாரணங்கள் விநியோக நடவடிக்கைகள் ஆகியவற்றில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு UNICEF, UNCHR, WFP, UNESCAP, UNOCHA, UNDP, IOM மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் என்பன சீரான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன.

## *8.2 நடைமுறைப்படுத்தப்பட்ட விடயங்கள்*


களுத்துரை, கம்பஹா, கொழும்பு, காலி, புத்தளம் மற்றும் மாத்தரை மாவட்டங்களை பாதிப்புக்குள்ளாக்கிய பாரிய நகர வெள்ளப்பெருக்கொன்று 2010 மே 13 – 25 வரை இடம்பெற்றது. இவ்வனர்த்தத்தில் 141,364 குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியதுடன் 18 உயிரிலப்புக்களும் பதிவாகின சுமார் 1542 வீடுகள் சிறிதானதாகவும் 448 வீடுகள் முற்றாகவும் சேதமடைந்தன.



2010 மே மாத்தரை கடுவையில் வெள்ளப் பாதிப்பு மக்களை காப்பாற்றுதல்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் (அ.மு.நி.) பாதிப்படைந்த மாவட்டங்களை கடற்படையின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைத்து பாதிப்படைந்த மாவட்டங்களுக்கு வள்ளங்களை வழங்கியதுடன் கம்பஹா மாவட்டத்தில் 02 நீர் சுத்திகரிக்கும் பொறிகளை தாபித்தது. அ.மு.நி. பாதிப்புக்குட்பட்ட மாவட்டங்களுக்கு 90 நீர் இறைக்கும் இயந்திரங்கள் 530 சமலறைப்பாத்திரங்கள் 380 கூடாரங்கள் மற்றும் ஏனைய உணவுசாரா நிவாரணப் பொருட்களை வழங்கியது.

நவம்பர் 10ஆம் திகதி பெய்த 444மி.மீ. மழை காரணமாக கொழும்பில் வெள்ளமேற்பட்டது. அவசர நடவடிக்கை நிலையம் உள்ளூர் அதிகார சபைகளையும் பாதுகாப்புத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து பாதைகளை திறக்கவும் மாற்று வழிகளை அமைக்கவும் பாதிப்படைந்தோருக்கு நிவாரணங்களை வழங்கவும் வழிசமைத்தது.



*2010 நவம்பர் பாராளுமன்ற கட்டிடத்தொகுதி வெள்ள நிவாரணம்*



*2010 நவம்பரில் வடகொழும்பு வைத்தியசாலையில் நோயாளிகளை மேல்மாடி வாட்டுகளுக்கு கையாள் இடமாற்றம் செய்தல்.*

2010 நவம்பர் 22 முதல் திசெம்பர் 10 வரை நாட்டில் பெய்த கடும் மழையினாலும் நாடுதழுவிய ரீதியில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்காலும் மொத்தமாக வட பிராந்திய 94,883 நபர்கள் (25,460 குடும்பங்கள்) உட்பட 105,974 நபர்கள் (26,825 குடும்பங்கள்) பாதிக்கப்பட்டன. அ.ந.நி. சம்பந்தப்பட்ட அதிகார சபைகளை ஒருங்கிணைத்து நிலைமை வழமைக்கு திரும்பும்வரை அவசர பதிலிறுப்பு நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

கண்டி மாவட்ட அந்தானை, நுவரெலியா மாவட்ட பிதுருதலாகலை, மாத்தளை மாவட்ட வில்கமுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட எம்பிலிபிட்டிய ஆகிய பிராந்தியங்களில் ஏற்பட்ட காட்டுத்தீயை அணைக்கவும் கட்டுப்படுத்தும் முகமாகவும் அ.இமு.நி. விமானப்படை பொலிஸ் மற்றும் இராணுவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயற்பட்டது.

2010 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக அ.மு.நி. விமானப்படையை ஒருங்கிணைத்து சோமாவதி பன்சாலையிலிருந்து நோயாளிகளை அப்புறப்படுத்தும் முகமாக ஹெலிகொப்டர் வசதியை செய்து கொடுத்தது.

25 மாவட்டங்களுக்கு 25 டபிள் கப் வாகனங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் பதிலிறுப்பு இயலுமை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் 2 டபிள் கப் வாகனங்கள், லேண்ட் குரூசர் வாகனம், அவசரக் கட்டளையிடல் வாகனம் மற்றும் 2 கோச் வண்டிகள் என்பன அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டன.




***2010 டிஸம்பர் 25ம் திகதி மாவட்டங்கள் 25க் புது வாகனங்கள் வழங்கல்***

## *8.3 அவசர பதிலிறுப்பு இயலுமையை மேம்படுத்துதல்*

### *8.3.1 இரசாயனப் பொருள் விபத்துக்களை கையாளும் முதற்தொகுதி குழுக்களை தாபித்தல்.*

இரசாயன ஆயுத தடை உடன்படிக்கை மற்றும் இரசாயன ஆயுதங்கள் நடைமுறைப் படுத்தல் தேசிய அதிகாரசபை, இலங்கை ஆகியவற்றின் தொழில்நுட்ப உதவியுடன் இராணுவ, விமானப்படை மற்றும் தீயணைப்புப் பிரிவை சேர்ந்த முதற்தொகுதி யினருக்கு 2010 யூன் மாதத்தில் நான்காவது மொடியுள் பயிற்சி வழங்கப்பட்டது.

### *8.3.2 கதிரியக்க அவசர நிலைமைகளைக் கையாளும் முதற்தொகுதி குழுக்களை தாபித்தல்.*

இராணுவ, விமானப்படை மற்றும் தீயணைப்புப் பிரிவை சேர்ந்த முதற் தொகுதியினருக்கு 2010 செப்டெம்பரில் கதிரியக்க அவசர நிலைமைகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.



*2010 செப்டெம்பர் கதிரியக்க அவசர நிலைமைகள் சலவையலகு*



*2010 செப்டெம்பர் கதிரியக்க அவசர நிலைமைகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்*

### *8.3.3 சேவர் பயிற்சி*

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அலகு பணியாட்கள், அரசியல் அதிகார சபைகளின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கான “முக்கிய அவசரகால பதிலிறுப்பு நடவடிக்கைகளுக்கான முறையான அணுகுமுறை” தொடர்பான மூன்று பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### *8.3.4 மக்களை அகற்றும் ஒத்திகைகள்*

13 கரையோர மாவட்டங்களை உள்ளடக்கிய முன்னேற்பாட்டு மற்றும் கரையோர சமூகத்தினரின் பாதுகாப்பு மேம்படுத்தல் தொடர்பான மூன்று தேசிய மட்ட சுனாமி அனர்த்த மக்களை அகற்றும் ஒத்திகை நிகழ்வுகள் 2010 யூலை 13, ஒக்டோபர் 13 மற்றும் டிசெம்பர் 22 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டது.

இவ்வொத்திகைக்கு முன்னர் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சியும் ஊடகங்களுக்கான மாநாடும் நடாத்தப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேம்படுத்த வேண்டிய பகுதிகள் இனங்காணப்பட்டு முன்னெச்சரிக்கை செயற்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் 2010 திசெம்பர் 22ஆம் திகதி நடாத்தப்பட்ட இறுதியான நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது குறைபாடுகளை மேம்படுத்தி 13 மாவட்ட சமூக மக்களையும் 20 – 45 நிமிடங்களுக்குள் அப்புறப்படுத்துவதில் வெற்றிகண்டது.



*2010 ஒக்டோபர் அப்புறப்படுத்துதல் ஒத்திகை தொடர்பான மக்களின் கருத்தைப் பெறல்*

## *8.4 முன்னெச்சரிக்கை*

### *8.4.1 முன்னெச்சரிக்கை கோபுரங்கள்*

- “அனர்த்த முகாமைத்தவு தொடர்பாடல் மற்றும் பதிலிறுப்பு இயலுமை அபிவிருத்தி கருத்திட்டம்” இதன் கீழ் சென்ற வருடம் நிர்மாணிக்கப்பட்ட 52 கோபுரங்கள்

ஆரம்பித்து வைக்கப்பட்டன. அத்துடன் அவை தேசிய முன்னெச்சரிக்கை தகவல் பரிமாற்று கட்டமைப்புடன் தொடர்புபடுத்தப்பட்டன.

- இரண்டாம் கட்ட அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் பதிலிறுப்பு இயலுமை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் 25 மேலதிக முன்னெச்சரிக்கைக் கோபுரங்கள் நிர்மாணிப்பதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளதுடன் முன்னெச்சரிக்கை கோபுரங்கள் நிர்மாணிப்பதற்கான 25 இடங்களும் தெரிவு செய்யப்பட்டன. 07 கோபுரங்களின் நிர்மாணப்பணிகள் முடிவுற்றும் 07 கோபுரங்களுக்கான அத்திவாரமும் இடப்பட்டுள்ளது.

### 8.4.2 *கதிரியக்க தொடர்பாடல்*

- அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் பதிலிறுப்பு இயலுமை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் 14 காவிச்செல்லக்கூடிய வானொலிக்கருவிகளும் ஒரு VHF தள நிலையமும், ஒவ்வொரு HF தள நிலையமும் முறையே கம்பஹ, புத்தளம், களுத்துரை, மாத்தரை, அம்பர்தோட்டை, கண்டி, பதுளை, இரத்தினபுரி, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டன.
- யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, மாத்தரை, கம்பஹா, பதுளை மற்றும் கண்டி மாவட்டங்களுக்கு செய்மதி தொலைத்தொடர்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.
- UNESCAP கருத்திட்ட நிதியின் கீழ் கொழும்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு ஒரு VHF தள நிலையம், ஒரு HF தள நிலையம் மற்றும் 20 காவிச்செல்லக்கூடிய வானொலிக் கருவிகளும் வழங்கப்பட்டு இலங்கையின் முன்னெச்சரிக்கை தகவல் பரிமாற்றம் தொடர்பான தேசிய இயலுமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 8.4.3 *முன்னெச்சரிக்கை தகவல் பரிமாற்றம் தொடர்பான தேசிய இயலுமை மேம்பாட்டுத் திட்டம் - இலங்கை*

- பிராந்திய தொலைபேசி நிலையங்கள் (TRC) மற்றும் கையடக்க தொலைபேசி சேவை வழங்குனர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி குறுஞ்செய்தி மூலமாகவும் பட்டரி ஒலிபரப்பு மூலமாகவும் தற்போதைய அனர்த்த முன்னெச்சரிக்கை தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- சுனாமி பாதிப்பு காணப்படும் கரையோர மாவட்டங்களுக்கு 207 பாரிய ஒலிபெருக்கிகளும் 05 பீ.ஏ. உபகரணங்களும் வழங்கப்பட்டன.

- மண்சரிவு அபாயம் காணப்படும் மாவட்டங்களுக்கு 202 மழைக்கால வள்ளங்கள் வழங்கப்பட்டன.

### *8.5 ஏனைய செயற்பாடுகள்*

### 8.5.1 அனர்த்த தகவல் முறைமை (Desinventar)

கடந்த 35 வருடங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள் தொடர்பான பதிவுகளை கொண்ட தகவல் தளத்தை டெசின்வன்டர் கொண்டுள்ளது. அவசரகால நடவடிக்கை நிலையம் இத்தகவல்களை இற்றைப்படுத்துகின்றது. டிஸ்சின்வன்டரின் தொடர்பு http://www.desinventar.net/ ஆகும்.

### 8.5.2 இலங்கை அனர்த்த வள கட்டமைப்பு (SLDRN)

SLDRN இன் தகவல்கள் UNDP யின் (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்) ஒத்துழைப்புடன் அவசரகால நடவடிக்கை நிலையத்தினால் இற்றைப்படுத்தப்படுகின்றது.

## 9. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) அனர்த்த அபாய முகாமைத்தவத்திற்கான பங்களிப்பு

### 9.1 அறிமுகம்

2005இல் தாபிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அனர்த்த அபாய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் (அ.மு.நி) மூலமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளை செய்து வருகின்றது. 2010இல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அவசரகால அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் அனர்த்த அபாய தணிப்பு செயற்பாடுகளை நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்யும் நடவடிக்கைகளில் தமது கருத்தை பூரணமாக செலுத்தியது. அதன் முக்கிய பணிகளாவன, வட மாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூல உபாய சுற்றாடல் மதிப்பீடு, பாரிய இயற்கை அனர்த்த அபாயங்கள் தொடர்பான விபரக்கொத்தை தயார் செய்தல் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வீட்டு நிர்மாணம் தொடர்பாக திட்டங்களையும் வழிகாட்டிகளையும் அபிவிருத்தி செய்தல். காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் அனர்த்த முகாமைத்துவ அரச முகவர்களுடன் சர்வதேச / அரசு சாரா முகவர்கள், மற்றும் தனியார் துறை முகவர்களுடன் பங்குடையையை ஸ்திரப்படுத்தல், அனர்த்த அபாய தணிப்பு தொடர்பான பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் சார் பிரசுரங்களை அபிவிருத்தி செய்தல் என்பனவாகும். மேலும், இந்த நிகழ்ச்சிநிரல் அனர்த்தத்திற்கு பின்னரான பாதிப்பு மற்றும் இழப்பு மதிப்பீட்டுக்கான இலங்கையின் இயலுமை 2 மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்தது.

**ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள்.**

## 9.2 அனர்த்த ஆபத்து மதிப்பீடு

### 9.2.1 பாரிய இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான அபாய அறிக்கை தயாரித்தல்.

மண்சரிவு, கரையோர அபாயம் மற்றும் வரட்சி தொடர்பான அபாய அறிக்கைகள் அபிவிருத்தி செய்தல் 2009ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்றது. இவ்வறிக்கைகள் பல்வேறு புவியியல் பிரதேசங்களில் ஓர் குறிப்பிட்ட அபாயம் அல்லது பல்வகை அபாயங்கள் எவ்வாறான அபாய நிலையை தோற்றுவிக்கும் என்பதை இனங்காண உதவியதுடன், அனர்த்த முகாமையாளர்களுக்கு திட்டமிடவும் முன்னேற்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்கவும் மற்றும் தேவையான வேளைகளில் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவியது. அபாய அறிக்கை அபிவிருத்தியானது சார்புடைய தொழில்நுட்ப முகவர்களின் ஒத்துழைப்புடன் அனர்த்த முகாமைத்துவ நிலைய ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டது. 2010ஆம் ஆண்டின் இறுதியில் வரட்சி, மண்சரிவு மற்றும் கரையோர ஆபத்து அறிக்கைகள் ஓர் குறிப்பிட்ட முன்னேற்றத்தை அடைந்தது. (வரட்சி 80% மண்சரிவு 75% கரையோர ஆபத்து 35%) அதேவேளையில் சூறாவளி மற்றும் வெள்ள ஆபத்து அறிக்கைகள் காரணமான முன்னேற்றத்தையே காட்டியது (சூறாவளி 15% வெள்ளம் 10%).

### 9.2.2 கிழக்கு மாகாண வெள்ளத்தணிப்பு படிப்பினை

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்காகவும் அவற்றை தணிப்பதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளவும் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் வெள்ள அனர்த்தத்தை தணிப்பது தொடர்பான விளக்கங்களை உள்ளடக்கிய ஓர் பரந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் இவ்வறிக்கையை இம்மாவட்டங்களில் வெள்ளத்தணிப்பு தொடர்பான செயற்பாடுகளுக்கு ஓர் வழிகாட்டியாக பயன்படுத்தும்.

### 9.2.3 வடமாகாண ஒருங்கிணைப்பு உபாய சுற்றாடல் மதிப்பீடு (ISEA)

அனர்த்த முகாமைத்துவ நிலையம் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவியைப் பெற்று அனர்த்த ஆபத்து குறைப்பை நோக்கமாகக் கொண்டு உபாய சுற்றாடல் மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு அம்மாகாணத்தின் நிலையான அபிவிருத்திக்கு உதவியது. ISEA

பல்வேறு அனர்த்தங்களுக்கு உட்படக்கூடிய பகுதிகளையும் சுற்றாடல் ரீதியில் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகள், நீரை இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய பகுதிகள், மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான கணிய வளங்கள் காணப்படும் இடங்கள் ஆகியவற்றை இனங்கண்டது. இம்மதிப்பீட்டின் வெளியீடுகள் முக்கிய அபிவிருத்தி சார் முகவர்களுடன் பகிரப்படப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் - களத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ள ஒத்துழைப்பு முகவர்கள்

### 9.2.4 அனர்த்தங்களை தாங்கக்கூடிய வீடமைப்பு மற்றும் ஏனைய உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தல்.

அனர்த்த முகாமைத்தவ நிலையம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிககழ்ச்சித்திட்டம் (UNDP)யின் ஒத்துழைப்புடன் பல்வேறு முகவர்களால் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளில் கட்டிட நிர்மாணம் தொடர்பாக அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டியை மீளாய்வு செய்வதற்கு ஓர் தொழில்நுட்ப ஆலோசனைக்குழுவை அமைத்தது. இக்குழு நிர்மாண சிவில் பொறியியல் கணிய அளவியல், புவிச்சரிதவியல் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், கட்டிடத்திணைக்களம், தேசிய வீடமைப்பு அதிகாரசபை (NHDA) சுகாதார நலனோம்புகை மற்றும் போசாக்கு அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய கட்டிட ஆய்வு நிறுவகம் மற்றும் ஏனைய முகவர்களைச் சேர்ந்த துறைசார் நிபுணத்துவர்களை உள்ளடக்குகின்றது.

2010ஆம் ஆண்டில் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன;

I. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள முகவர்களின் அதிகாரிகளுக்கு ‘‘அனர்த்த எதிர் நிர்மாணம் எனும் கருப்பொருளில் ஓர் தேசிய செயலமர்வு நடாத்தப்பட்டது.

II. கட்டிட நிர்மாணம் தொடர்பாக அனுமதி வழங்க உள்ளூராட்சி சபைகள் பயன்படுத்தும் அனர்த்த அபாய குறைப்பு விடய்ஙகளை உள்ளடக்கிய ஓர் சரிபார்த்தல் பட்டியல் செய்து முடிக்கப்பட்டது.

III. ‘அனர்த்த தாங்குதிறன் வைத்தியசாலை கட்டிடம்’ தொடர்பான ஓர் திட்டம் செய்து முடிக்கப்பட்டது.

IV. ‘அனர்த்த அபாய குறைப்பை’ ஓர் பகுதியாக தொழில்நுட்ப கல்லூரிகளின் சிவில் பொறியியல் பாடவிதானத்தில் உள்ளடங்கும் முகமாக தொழில்நுட்ப கல்லூரிகளின் சிவில் பொறியியல் பணியாட்களுக்கு ஓர் பயிற்சி நிகழ்வொன்று நடாத்தப்பட்டது.

V. பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோருக்கான 3 நாள் பாடநெறி மொடியுள்களை உள்ளடக்கிய பயிற்சியொன்று ‘அனர்த்த எதிர் வீடமைப்பு நிர்மாணம்’ எனும் கருப்பொருளில் உருவாக்கப்பட்டது.

## 9.3 காலநிலை மாற்றம் தாங்குதிறன் செயற்பாடுகள்

### 9.3.1 கால நிலை மாற்றங்களுக்காக மொடியுல் பற்றிய மக்களுக்கிடையேயான கருத்திட்டம்

#### i. வரட்சி தாங்குதிறன் செயற்பாடுகள் - கின்டிலியா, மொனராகலை

மொனராகலை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கின்டிலிய, மொனராகலை பகுதிகளில் நடைமுறைப்படுத்தும் முகமாக ஓர் வரட்சி தாங்குதிறன் மொடியுள் கருத்திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இக்கருத்திட்டம் கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் (DAD) மற்றும் விவசாயத்திணைக்களத்தின் தேசிய வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் முக்கிய பகுதிகளாவன நூறு வருடங்களுக்கு மேலாக விடப்பட்டிருந்த கின்டிலியா குளத்தை மறுசீரமைத்தல் மழைவீழ்ச்சியை பாதுகாத்தல், வரட்சி காலத்திற்கு கந்த விவசாயப் பயிர்களை கமக்காரர்களுக்கு வழங்கல் ஆகியவையாகும். வருட இறுதியில் மறுசீரமைப்பு முற்றுப்பெற்றது. ஆயினும் நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட பாரிய மழைகாரணமாக மீண்டும் குளத்தில் வெடிப்பு ஏற்பட்டது. ஏனைய செயற்பாடுகள் 2011இல் முற்றுப்பெறும்.

### ii. வெள்ள தாங்குதிறன் கருத்திட்டம்

வெள்ள காலநிலையில் நெல் விவசாயம் செய்தல் தொடர்பாக காணப்படும் தொழில்நுட்ப முறைகளை விவசாயிகளுக்கு செய்து காட்டுதல் தொடர்பாக அரிசி ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தின் (RRDI) ஒத்துழைப்புடன் சுமார் 25 விவசாயிகளை உள்ளடக்கி ஓர் முன்னோடிக் கருத்திட்டமொன்று களுத்துரை மாவட்ட கொலமெதிரிய (யன்டாரகம்) பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. பல்வேறு வெள்ள தாங்குதிறன் கொண்ட அரிசி வகைகள் மற்றும் பல்வேறு கலாசாரங்களில் நடைமுறையிலுள்ள வழக்கங்களின் கலப்பு முறைகளும் பரீட்சிக்கப்பட்டன. இக்கருத்திட்டம் சிறந்த நம்பிக்கையூட்டும் முடிவை தந்துள்ளதுடன் 2011 ஆண்டின் இரண்டாம் கட்டத்தில் தொடரப்படும்.

### iii. காலநிலை மாற்றம் தாங்குதிறன் நுட்பமாக வரட்சி மற்றும் வெள்ளத் தணிப்பில் உதவும் சமுதாய பயிர்வித்து வங்கி

சதுறுக்கொண்டான், மட்டக்களப்பு பகுதிகளில் வரட்சி வெள்ளம் ஆகியவற்றை தாங்கும் திறன் கொண்ட பல்வேறு பயிர்வித்து வங்கியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மற்றொரு காலநிலை மாற்றம் தாங்குதிறன் மொடியுள் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வருடத்தில் பயிர் வித்துவங்கியை தாபித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பில் சதுறுக்கொண்டான் கமத்தொழிலாளர் நிறுவகத்திற்கு பயிற்சி வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் பல்வேறு பயிர்களை பயிரிடும் 61 உள்ளூர் விவசாயிகள் இனங்காணப்பட்டனர் முதற்கட்ட அதிகரிப்பு நடவடிக்கைகள் மற்றுப்பெற்றன. இரண்டாம் கட்ட அதிகரிப்பு நடவடிக்கையில் கமத்தொழிலாளர் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. முதற்கட்டத்தின் இறுதியில் பெறப்பட்ட அறுவடையின் பின்னர் ¼ பங்கு பயிர்வித்து வங்கியில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதுடன் (சிறிய பகுதி) ¼ பங்கு கிழக்கு பல்கலைக் கழகத்தில் பாதுகாக்கப்படுகின்றது.

## 9.3.2 காலநிலை மாற்றம் தொடர்பான கல்வி மற்றும் புழிப்புணர்ச்சி புத்தகங்களை தயாரித்தல்.

### i. உப்புத்தன்மை தாங்கு திறன் மொடியுள் மற்றும் விழிப்புணர்ச்சி

அனர்த்த முகாமைத்துவ நிலையம் அசிரி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் (அ.ஆ.அ.நி) இணைந்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒத்துழைப்புடன் புத்தளம் மாவட்ட கமக்காரர்களுக்கு உப்புத்தன்மையுள்ள நிலத்தில் நெற்பயிர் செய்கையில் ஈடுபடுத்தும் முகமாக ஓர் வெற்றிகரமான கருத்திட்டத்தை நடாத்தியுள்ளது. 2010ஆம் ஆண்டில், உப்புத்தன்மை வாய்ந்த நிலத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் போது பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கருவிகள் (வீடியோ,

சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரம் மற்றும் கைநூல்கள்) மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கான உதவிகளை அ.ஆ.அ.நி. பெற்றுக்கொண்டது.

**ii. வெள்ள வரட்சி காலநிலையில் பின்புற்றக்கூடிய விவசாய முறைகளை உள்ளடக்கிய சிறந்தவொரு வழிகாட்டி நூலை அபிவிருத்தி செய்தல்.**

அ.மு.நி. விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான மன்றத்தின் (வி.ஆ.கொ.ம.) ஒத்துழைப்புடன் வெள்ள வரட்சிகால விவசாய செயற்பாட்டிற்கு உகந்த சிறந்த ஒரு வழிகாட்டி நூலை அபிவிருத்தி செய்துள்ளது. இந்நூல் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கடுமையான காலநிலை மாற்றங்களின் போது ஏற்படும் பயிர்நாசத்தை குறைந்தளவில் பராமரிப்பதற்கான அறிவை களமட்ட விவசாய பணியாளர்கள் மூலமாக கமக்காரர்களுக்கு பரப்புவதற்கும் உதவியது.

## 9.4 பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிநிரல்

### 9.4.1 கரையோர அபாய மதிப்பீடு தொடர்பான தேசிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2010 யூன் 30 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.2 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் நியாயமாகச் சமாப்பிக்கப்படுவதற்கு உரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு உகந்த

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றது.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளின் போதியளவு செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும், நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானளவு விரிவானதொரு கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கமைய மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் ஆதாரப்படுத் தத்தக்க சான்றுகளைப் பரிசீலித்தல், நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளையும் மதிப்பாய்வு செய்தல், அவற்றின் ஒட்டு மொத்தமான வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு என்பவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்காக அவசியமானதென எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியுள்ளதென்றும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனையின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்களுக்கும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய அனர்த்த முகாமைத்துவ நிலையம் 2009 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப்பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

இது தொடர்பாக பின்வரும் அதவானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை தொடர்பாக நிதியம் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வேறாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2009 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான் நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கு அவசியமான பதிவேடுகள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18

நிலையத்தினால் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிராமையால் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த நிலையான சொத்துக்களின் குறைத்தெழுதிய பெறுமதி, பெறுமானத் தேய்வு, பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு மீதிகள் சரியானவையா என கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆசிய அனர்த்த முன்னோடி சுனாமி நிலையத்தினால் ரூபா 1,312,233 வழங்கப்பட்டிருந்த போதிலும் அப் பெறுமதியில் ரூபா 257,709 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் அபிவிருத்திச் செயற்திட்டத்தில் இருந்து பெறப்பட்டிருந்த ரூபா 2,280,506 தொகையில் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 1,832,831 கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) அனர்த்தத்திற்கு உட்பட்ட மக்களுக்காக வழங்கப்படுவதற்காக அன்பளிப்பாக ரூபா 111,640,510 நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்ததுடன் ரூபா 153,307,484 அன்பளிப்பாக அம் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அன்பளிப்பாக மீளாய்வாண்டின் இறுதிவரை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த ரூபா 153,307,484 மீண்டும் நிலையத்தின் சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

2.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 82,609,887 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களுக்கான பதிவேடுகள், கூட்டுத்தொகை ரூபா 13,809,132 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் தொடர்பாக கணிப்பிடப்படும் விதத்தைக் காண்பிக்கும் விபரமான பட்டோலைகள் இன்மையால் இவை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்படவோ, மெய்மையாய்வு செய்வதற்கோ ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

2.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | |
| | (i) 5.1 ஆம் பிரிவு | நிலையத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த உபாயமார்க்க முன்னோடித்திட்டம் அடங்கிய கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 14(1) ஆம் பிரிவு மற்றும் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதிக் கணக்குகளுடன் வரைபு ஆண்டறிக்கை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 6.5.3 ஆம் பிரிவு | 2008 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட |

(அ) அனர்த்த குறைப்பிற்கான நிலையத்தினால் 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த 39 செயற்திட்டங்களில் மீளாய்வாண்டின் போது 15 செயற்திட்டங்களில் மாத்திரமே வேலைகள் நடைபெற்றிருந்தன. மிகுதி 24 செயற்திட்டங்களும் ஆண்டின் போது எவ்வித செயற்பாடுகளும் அற்றிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டவையாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது 04 மாவட்டங்களின் அனர்த்த நடவடிக்கைகளுக்காக 28 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் இவற்றில் 24 செயற்திட்டங்கள் களுத்துறை மாவட்டத்திற்கு உரித்தாக இருந்தது. இச் செயற்திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்களாக இனங்காணப்பட்டு இதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 31,024,651 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டின் போது அச் செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பெறுபேறுகள் பெறப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டமையே இதற்குக் காரணமாக இருந்ததென்பணிப்பாளர் நாயகம் அறிவித்திருந்தார்.

(இ) அனர்த்த தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில் செலவின மதிப்பீடு முறையாகத் திட்டமிடப்பட்டிராமையால் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த பணம் இதற்காகப் பயன்படுத்தப்படாது மீள நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) களுத்துறை மாவட்டத்தின் அகலவத்தை வலயத்திற்கு குடிநீர் வழங்கும் செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000,000 வழங்கப்பட்டிருந்த போதிலும் அது செயற்பட்டிராததுடன் 2008 ஆம் ஆண்டு வரை நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் இச் செயற்திட்டம் செயற்பட்டிராததுடன் ரூபா 84,443 பெறுமதி சேர் வரியாக பிடித்து வைக்கப்பட்ட ரூபா 1,915,556 மீள நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ii) குருநாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவின் மஹ சியம்பலாண்டுவ பிரதேசத்தில் 15 கி.மீ. கள் அளவில் மின்

| | |
|---|---|
| | கணக்குடன் கணக்காய்வு அறிக்கை 2010 மே 31 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நி.பி. 396(ஈ) | வழங்கப்பட்ட எனினும் 06 மாதங்கள் கடந்திருந்திருந்தும் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 10,030 பெறுமதியான இரு காசோலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. |

### 2.3.6 செயலாற்றல்

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இடரைக் குறைக்கம் நோக்கில் இடர் நிலவும் மாவட்டங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படும் தகவல்களின் படி 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடு பின்வருமாறாகும்.

| | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|
| ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட அனர்த்த குறைப்பு செயற்திட்டங்கள் | 38 | 31 | 06 |
| வேலை பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள் | 21 | 39 | 08 |
| வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் | 17 | 13 | 67 |

2008 ஆம் ஆண்டின் போது நடைமுறை வேலையின் கீழ் 39 அனர்த்த குறைப்பு செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் இவற்றில் 21 செயற்திட்டங்கள் 2007 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களாகும்.

இங்கு பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

கம்பிவேலிகள் நிர்மாணிப்பதற்காக மதிப்பீட்டுத் தொகை ரூபா 9,700,000 ஆனதுடன் 2007 ஆம் 2008 ஆகிய 2 ஆண்டுகளின் போது முறையே ரூபா 5,700,000 தொகையும் ரூபா 2,322,264 தொகையும் வழங்கப்பட்டிருந்தது. ரூபா 7,700,000 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு 11 கி.மீ. வரையில் மின்கம்பிகள் ஸ்தாபிக்கப்பட்டு மிகுதி ரூபா 322,264 தொகை மீள நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ரூபா 11,091,748 நட்டமாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தும் ரூபா 3,022,105 தொகையான நட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 8,069,643 ஆல் நட்டத்தில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

### 3.2 பதவியணி முகாமைத்துவம்

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 215 ஆனதுடன் உள்ளபடியான பதவியணி 151 ஆகக் காணப்பட்டது.

(அ) பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை திறைசேரி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரின் அவசியம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முகாமைத்துவத் திறமையீனங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அனர்த்த தடுப்பு மற்றும் குறைப்பதற்காகவும் சுனாமிப் பேரழிவிற்கு உட்பட்டவர்களை மீள வழமை நிலைக்கு கொண்டு வருவதற்காக 10 வெவ்வேறு நிறுவகங்களினால் ரூபா

11,064,688 தொகை கொடையாக கிடைக்கப்பெற்றிருந்ததுடன் ரூபா 5,312,360 எஞ்சியிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வெள்ள நீரைக் குறைக்கும் நடவடிக்கைகளுக்காக சீன நாட்டில் இருந்து ரூபா 1,000,000 தொகை பெறப்பட்டிருந்த போதிலும் இதில் 33% மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) சுனாமி நடவடிக்கைகளுக்காக இத்தாலியில் இருந்து பெறப்பட்ட ரூபா 1,015,000 இல் 4.2% மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) பத்து வெவ்வேறு நிறுவகங்களிடம் இருந்து ரூபா 11,064,688 பெறப்பட்டிருந்த போதிலும் நிலையத்தினால் செலவினங்களை மேற்கொள்வதற்கு பாதீடோ அல்லது திட்டமோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) இடர் கணக்கீடு செயற்திட்டம்
(ஆ) இடர்களுக்காக பிரதிபலனளிப்பதற்கு உரிய உபகரணங்களை வழங்குதல்
(இ) அன்பளிப்பு
(ஈ) உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம். எஸ். ஸ்வர்ணஜோதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
*ms/v*

கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் திணைக்களம்,
கொழும்பு-07.

**அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2010 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்று தொடர்பான 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் கீழான கணக்காய்வு அதிபதி அவர்களின் அறிக்கை**

மேற்கூறிய விடயம் தொடர்பாக உங்களின் சம இலக்கமும் 2011 ஜூலை மாதம் 30ஆந் திகதியுமுடைய கடிதத்துடன் தொடர்புபடும். அது தொடர்பான விளக்கம் பின்வருமாறு.

2.2.(அ) உடன்படுகின்றேன்.

இந்த நிதியத்தை ஏற்படுத்துவதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2010.12.28ஆந் திகதி நடைபெற்ற அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபைக்கு பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் குறித்த அனுமதி கிடைக்காமையினால் இந்த நிதியத்தை ஏற்படுத்த முடியவில்லை (இணைப்பு -01)

(ஆ) தேசிய சபை தொடர்பான செலவுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் இடர் முகாமைத்துவ அமைச்சு கணக்காய்வில் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

2.3. நிதி வெளிப்படுத்தல் தொடர்பான கருத்து வெளியீடு

2.3.1. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பதவியணியில் காணப்பட்ட பற்றாக்குறை மற்றும் வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் இருந்ததினால் இதற்காக பூரணகால ஊழியர் ஒருவரை நியமிக்க முடியவில்லை. கணக்குப் பிரிவில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் ஏனைய கடமைகளுக்கு மத்தியில் இவற்றில் ஈடுபடுத்தப்பட்டு பலதரப்பட்ட வசதியீனங்களுக்கு மத்தியில் அனர்த்த முகாமைத்தவ நிலையத்துக்கு 2010 ஆம் ஆண்டின் இறுதிவரைக் கிடைத்த பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு அந்தந்த பிரிவுகளுக்கமைய பட்டியல் படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பட்டியலிடப்பட்ட பொருட்கள் இலக்கமிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன. இதற்காக நிலையான சொத்துக்கள் தொடர்பான கணினி பொதி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் அந்த பொதியை ஒழுங்கமைப்பதற்காக குறிப்பிட்ட நிறுவனத்தினாலும் ஆற்ற வேண்டிய ஒரு தொகுதி பணிகள் இருப்பதனால் அவர்களை அழைப்பதில் இருந்த வசதியின்மையும் இந்த விடயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதேபோன்று குறிப்பிட்ட வருடம் வரை இந்தப் பொருட்களை பட்டியல் படுத்தலில் எமக்குக் கிடைத்த பொருட்களின் விலைகளை கண்டறிவதில் காணப்பட்ட கஸ்டங்களினால் நிலையான சொத்துக்கள் தொடர்பான பட்டியலிடப்பட்ட ஆவணத்தை ஒழுங்குபடுத்த முடியவில்லை என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன். தற்போது பதவியணியினரை

சேர்த்துக் கொள்வதற்கான அனுமதி கிடைத்திருப்பதுடன் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஆடசேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் 2011.12.31 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டு ஒழுங்கமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வசதியீனம் காரணமாக 2009.12.31 ஆந் திகதி வரையிலான சொத்துக்கள் மாற்றமில்லாமல் இருந்தன என்ற அடிப்படையில் அவை தேய்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2010 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் பாவிக்கப்பட்ட காலத்தை அடிப்படையாகக் வைத்து குறிப்பிட்ட தேய்மான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது அ, ஆ, இ, ஈ என்ற குறியீடுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. சொத்துக்கள் தொடர்பான ஆவணத்தில் குறைபாடுகள் திருத்தும் அடிப்படையில் விகிதாசார அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

2.3.2. கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) உடன்படுகின்றேன். எனினும் நிதி ஒதுக்கல்களையும் தாண்டி செலவுகள் செய்யப்படவில்லை என அறிவிக்கின்றேன். எதிர்வரும் நாட்களில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவண்ணம் நடவடிக்கை எடுப்பதாகவும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

(ஆ) 2009 இல் மோட்டார் வாகனங்களின் பொறுமதி குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதனால் 2010 இல் வாகனங்களின் உண்மையான பெறுமதியில் பொறுமானத் தேய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அனதற்கமைய இந்த நிலமை ஏற்பட்டதாக அறிவிக்கின்றேன்.

(இ) மீளாய்வு ஆண்டினுள் அலுவலக தளபாட உபகரணங்களின் பெறுமானத் தேய்வு ரூபா. 3,799,960.84 ஆகும். இதன்படி மேல் 2.3.1. இல் குறிப்பிடப்பட்ட தேய்மான பெறுமதிக்கமைய 2010 இல் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மீளய்வு ஆண்டினுள் அலுவலக உபகரணங்களின் பெறுமானத் தேய்வு பெறுமமதி ரூபா 49,900,052.02 ஆகும். இதன்படி 2.3.1. இல் குறிப்பிடப்பட்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி தேய்வுக்கமைய தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

(உ) இந்த உதவிப்பணிப்பாளர்கள் கணினி புதுப்பித்தல்களுக்காகவே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் சொத்துக்களின் பெறுமதி அதிகரிப்பு ஏற்படுவதில்லை என்பதுடன் மூலதனப்படுத்தலும் இடம்பெறமாட்டாது.

(ஊ) மேலே (ஆ) வில் குறிப்பிடப்பட்டட காரணங்களினால் இந்த நிலைமை ஏற்பட்டதாக தயவுடன் அறிவிக்கின்றேன்.

2.3.4. உடன்படுகின்றேன்.

2.3.1.ஆம் இலக்க பந்தியில் குறிப்பிடப்பட்ட காரணங்களினால் இந்த நிலைமை ஏற்பட்டதாக தயவுடன் அறிவிக்கின்றேன்.

2.3.5. சட்டங்கள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு அமைவாக செயற்படாமை

(அ) செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்கள் சிலர் அவற்றை ஒப்படைத்துள்ளதுடன் ஒப்படைக்காதவர்கள் தமது அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஆ) ஏற்பட்ட தவறு அவதானிக்கப்பட்டவுடன் இரண்டாவதாக செலுத்தப்பட்ட பெறுமதியை மீள அசலுத்துமாறு அறிவித்து பணம் அறவிடப்பட்டுள்ளது. பற்றுச்சீட்டு இலக்கம் 0360 திகதி 2011.03.09 (இணைப்பு 02)

(இ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இன்மையினால் தாபனத்துக்குரிய வாகனங்களை முறையாக பரிசீலிக்க முடியவில்லை. அதேபோன்று குறிப்பிட்ட வாகனங்கள் ஒரே தடவையில் எமது நிறுவனத்ததுக்கு கிடைத்தமையினால் ஒரு தடவை எரிபொருள் தொடர்பாக பரிசீலித்து அதன்படி வாகனம் ஓட வேண்டிய கிலோ மீற்றர் தூரம் குறிப்பிடப்பட்டுள்ளது. சில மாவட்டங்களில் புவியியல் ரீதியான மனப்பாங்கு பிரதேசங்களின் நிலைமையின் அடிப்படையில் அங்கு வாகனம் ஓட வேண்டிய கிலோ மீற்றர் தூரம் குறைவாக காணப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் இது சீர் செய்யப்பட்டு குறிப்பிட்ட விதிமுறைகளுக்கமைய எரிபொருளை பிரிசணூலிக்க நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கின்றேன்.

(இ)(i) உடன்படுகின்றேன். வாகனம் பயணித்த தூரம், நேரகாலம் தொடபான குறிப்புக்கள் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் இனிமேல் ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) உடன்படுகின்றேன். பரிசீலனைகளை தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கின்றேன்.

(iii) இடர் முகாமைத்துவ முன் ஆயத்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த மாவட்டங்களினால் முன்வைக்கப்படும் முற்பன கோரிக்கைகளின் போது மாவட்டத்தின் சில இடங்களில் மேற்கொள்ளப்படும் பல நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒரே தடவையில் நிதி கேட்கப்படுகின்றது.

நாங்கள் அந்த மதிப்பீடுகளை பரிசீலித்து தேவைப்படும் பணத்தை பல நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. இறுதியில் மாவட்ட செயலாளர்கள் ஊடாக தேவையான நிதி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இவை மாவட்ட செயகங்களுக்கு ஒதுக்கப்பட்ட காரியங்களை பூர்த்தி செய்வதற்காக அரச நிறுவனமொன்றுக்கு பணம் வழங்கும் நடவடிக்கையாகும்.

(iv) முன் ஆயத்த திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பணம் வழங்கப்பட்ட போதிலும் மீளாய்வு ஆண்டினுள் குறிப்பிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட பலதரப்பட்ட அனர்த்தங்கள் காரணமாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பணிகள் மாற்றமடைந்ததினால் முன் ஆயத்த நடவடிக்ககைளை திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியவில்லை. அவ்வாறு முன் ஆயத்த நடவடிக்கைகள் பிற்போடப்பட்டாலும் பற்றுச்சீட்டுக்களை செலுத்தப்படுவது தாமதமடைந்திருப்பதுடன் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடைபெற்று முடிந்தவுடன் பற்றுச்சீட்டுக்களுக்கான செலுத்தல்கள் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பற்றுச் சீட்டுக்கள் இறுதியில் மாவட்டச் செயலாளர் அல்லது கணக்காய்வாளர் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட வேண்டும் என்பதனால் குறிப்பிட்ட அலுவலகங்களில் ஏற்படும் தாமதம் காரணமாக சில முற்பணங்களை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளன. பல தடவைகள் கோரிக்கை விடப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் கிடைத்ததன் பின்னர் முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதை தயவுடன் அறிவிக்கின்றோம்.

2.3.6. செயலாற்றுகை

I. 2010 ஆம் ஆண்டு ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் கொழும்பு மற்றும் களுத்துரை மாவட்டத்தில் அனர்த்தங்களை குறைத்தல் மற்றும் திடீர் அனர்த்தங்களின்போது ஆபத்ததை குறைத்துக் கொள்ளக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் என்பனவற்றை இலக்காகக் கொண்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்கு மதிப்பீடுகளுக்கமைய நிதி ஏற்பாடுகள் ஆரம்பத்தில் முற்பணங்களாக பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் அதன் முன்னேற்றத்துக்கமைய மீதிப்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த கருத்திட்டங்க்ள பெயர் குறிப்பிடப்பட்டால் மேலதிக விபரங்களை வழங்க முடியும்.

II. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முக்கிய நோக்கம் அனர்த்தங்களை உறுதியாக இனங்கண்டு அவற்றறை தடுக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் திடீர் அனர்த்தங்களின் போது பதில் நடவடிக்கையாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதாகும். இலங்கையின் பலதரப்பட்ட பகுதிகளில் நிலவும் அனர்த்தங்களை அதன் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் பதில் நடைவடிக்கைகளின் போது இதன் மூலம் பயன்பெறும் மக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி இந்த அனர்த்தங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்காக ஆரம்பத்தில் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட 02 மாவட்டங்களில் 03 கருத்திட்டங்களை பெயர் குறிப்பிட்டால் அது தொடர்பான தகவல்களை வழங்க முடியும்.

III. அனர்த்த முகாமைத்தவ நிலையத்தின் அடிப்படை நோக்கம் அனர்த்தங்களை உறுதியாக இனங்காணுதல், அவற்றறை தடுக்க நடவடிக்கை எடுத்தல், மற்றும் திடீர் அனர்த்தங்களின்போது பதில் நடவடிக்கையாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதாகவும் இலங்கையின் பலதரப்பட்ட பகுதிகளில் நிலவும் அனர்த்தங்களையும்

அதன் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் பதில் நடவடிக்கைகளின் போது இதன் மூலம் பயன்பெறும் மக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி இந்த அனர்த்தங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்காக ஆரம்பத்தில் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிட்ட 09 மாவட்டங்கள் மற்றும் 16 கருத்திட்டங்கள் தொடர்பாக அறிவித்தால் குறிப்பிட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக மேலதிக தகவல்கள் வழங்குவது வசதியாக இருக்கும்.

IV. கம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் அந்த பிரதேசத்தின் பிரதேச சபையின் கீழ் வருவதுடன் அவசரத் தேவைகளை கருத்திற்கொண்டு பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் ஒப்பந்தம் செய்வதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் மாவட்ட செயலாளருக்கு உரிய நிதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதிக்கான ஏற்பாடுகள் செயள்யப்பட்டிருக்க வில்லை. அனர்த்த முகாமைத்தவ நிலையத்தின் தலைமை செயலகம் தலையிட்டு அனர்த்தங்களை குறைத்துக் கொள்வதற்கான திடீர் தேவைகளுக்கமைய கருத்திட்டங்களை துரித்மாக நடைமுறைப்படுத்தியதாக பிரதேச சபை முன்வைத்த காரணங்களின் அடிப்படையில் அதன் முன்னேற்றம் மற்றும் காலத்தை கவனத்தில் கொண்டு முன்னேற்றம் மற்றும் அதன் கரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இரண்டு தரப்பினரின் உடன்பாட்டுடன் பணம் செலுத்தி கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

V. களுத்துரை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களை பூர்த்தி செய்து மீதி நிதி ஒதுக்கத்தை நிலையத்துக்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மாத்திரம் கன்னங்கர மகாவித்தியாலத்தில் நடைமுறைப்படுத்தப் பட்ட கருத்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளின் மீதான சிக்கல் நிலைமைகளின் காரணமாக கருத்திட்டம் தாமதமின்றி உள்ளதுடன் இருதரப்பினருக்குமிடையில் பணம் செலுத்தி உடன்பாட்டுடன் கருத்திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

V. களுத்துரை மாவட்டத்தில் நடைமுறையிலிருக்கும் கருத்திட்டங்களை பூர்த்தி செய்து மீதி பணத்தை நிலையத்துக்கு வழங்குவதற்கு நடவடிகை எடுக்கப்பட்டதுடன் ............ கன்னங்கர மகாவித்தியாலயத்தில் நடமுறைப்படுப்படுத்தப்பட்ட கருத்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதன் சிக்கல் நிலமை மத்தியில் கருத்திட்டம் தாமதமடைந்துள்ளதுடன் கருத்திட்டத்தை உரியவாறு பூர்த்தி செய்து மீதிப்பணத்ததை நிலையத்துக்கு வழங்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2.3.7. முகாமைத்துவ ரீதியிலான செயலாற்றுத்திறன் இன்மை

(அ) முன் ஆயத்தங்களைத் திட்டமிடல்

i. அனர்த்த முன் ஆயத்த செயற்பாடுகளுக்கான திட்டமிடுதலின் போது பரதரப்பட்ட மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் பண்டங்களின் விலைகளின் மாற்றங்களுக்கமைய மற்றும் செயலமர்வுகள் / கருத்தரங்குகளுக்கு கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கைக்கு அமைய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்காக அரச நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றின் சாத்தியப்பாடு என்பவற்றை கருத்தில் கொண்டு அந்தந்த மாவட்டங்களின் கோரிக்கைகளுக்கமைய பணம் வழங்கப்பட்டுள்ளதாக தயவு கூர்ந்து அறிவிக்கின்றேன். எனினும் தற்போது மாவட்ட செயலமர்வுகள் / கருத்திட்டங்களுக்காக செலவின மதிப்பீடொன்று எங்களால் தயார்செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து மாவட்டங்களுக்கும் அதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ii. கண்டி, காலி, மாத்தரை, அம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, மாத்தளை, நுவரெலியா, புத்தளம், இரத்தினபுரி, குருநாகல், கேகாலை மாவட்டங்களின் அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் ஏற்கனவே தயார்செய்யப்பட்டு அச்சிடப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் இந்த மீளாய்வு ஆண்டினுள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவிய நிலைமைகளின் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் திட்ட தயாரிப்பு பணிகள் தாமதமடைந்து ள்ளன. எவ்வாறு இருப்பினும் திட்டங்கள் தயாரிக்க மீதியாக இருந்த மீதி 09 மாவட்டங்களில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் வரைவு பிரதிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் அவற்றை அச்சிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

iii. முன் ஆயத்த திட்டங்களை தயார் செய்தல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு மேலதிகமாக பலதரப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாறான பல நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும் போது ஏற்படும் கஸ்டங்கள் மற்றும் தாமதங்கள் காரணமாக அந்த திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்வதற்கு வேறுகாலம் இருக்கவில்லை என்பதை அறிவிக்க விரும்புகின்றேன். தற்போது இந்த பிரிவுக்கு போதியளவு பதவியணியினரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எதிர்வரும் நாட்களில் மீளாய்வுப் பணிகளை செயலாற்றுத் திறனுடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அனர்த்த ஒருங்கிணைப்பு அலுவலகங்களை ஆரம்பித்தல்.

i. இதுவரை மாவட்டத்தில் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த மற்றும் ஆகக்கூடிய எண்ணிக்கை சரியாக உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடமாற்றம் சபையினால் அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து குறிப்பிட்ட இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்புக்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. (இணைப்பு 03)

ii. மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களின் மாவட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக ஒவ்வொரு மாதத்திற்கொரு தடவை முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுவதுடன் குறிப்பிட்ட கூட்டத்தின் செயலாற்றுத்திறன் தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

iii. மேற்குறிப்பிட்ட கூட்டத்தில் ஒவ்வொரு கருத்திட்டங்களன் தொடர்பாக வழங்கப்பட்ட பணம் செலவு செய்யப்பட்ட விதம் தொடர்பாக ஆராய்ந்து மீதிப்பணத்ததை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

iv. மேற்குறிப்பிட்ட மீளாய்வுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை தொடர்பாக பரிசீலிக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

(இ) உடன்படுகின்றேன்

இறுதி பெறுபேறுகளில் மாற்றம் இல்லாமையினால் இதன்படி கணக்குப் பதியப்படும்.

(ஈ) இங்கு குறிப்பிட்ட இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்து அந்த இயந்திர உபகரணங்களில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவை அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அந்த கருத்திட்டப் பணிகளுக்கு பயன்படுத்தப் படுகின்றது.

(உ) அன்பளிப்புக்கள் மிகவும் குறைந்தபட்ச பாவனையில் காணப்படுதல்.

i. கிடைத்திருந்த அன்பளிப்புக்கள் அவசர நிலைமைகளின் கீழ் அனர்த்தங்களுக்கமைய பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன்போது அதற்கு முன்னர் வழங்கப்பட்ட உபகரணங்களின் அளவு வழங்கப்பட்ட காலஎல்லை, குறிப்பிட்ட மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான பிரதேசங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்பட்டன. அனர்த்தங்கள் எதிர்பாராவிதமாக நடைபெறுகின்றன என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

ii. அன்பளிப்பாக கிடைத்த பணத்தை செலவு செய்வதற்காக அந்த நிறுவனங்களுடன் ஒப்பந்த ரீதியில் செயற்படுவதுடன் அந்த ஒப்பந்தத்தில் காட்டப்பட்ட விடயங்களுக்காக அந்தப் பணத்தை செலவிட வேண்டும். அன்பளிப்பாக கிடைத்த பணம் ஒவ்வொரு குறிப்பிட்ட விடயங்களுக்காக 2010 இல் செலவுகள் செய்யப்பட:டுள்ளதுடன் மீதி செலவினங்களுக்கான திட்டமிடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

iii. அனர்த்த முகாமைத்துவப் பணிகளுக்காக இத்தாலி நாட்டிலிருந்து வந்த முகவர்களுக்கு குறிப்பிட்ட பணிகள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் அந்த நாட்டில் ஏற்பட்டட அனர்த்தம் காரணமாக அந்தப் பிரதிநிதிகள் தமது தாயகம் சென்றுள்ளனர். குறிப்பிட்ட பணத்தை செலவழிக்க அனுமதி கோரியுள்ள போதிலும் அந்தப் பணத்தை செலவு செய்ய வேண்டாமென எங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதனால் அதனை செலவு செய்ய முடியவில்லலை.

(ஊ) குறிப்பிட்ட கருடத்துக்காக மோட்டார் வாகனங்களை வாகனத்தின் பெறுமதி சேர்க்கப்பட்ட பின்னரே கணக்கில் பதியப்பட்டுள்ளன. (பேரேட்டின் 07வது இலக்க பக்கம் மற்றும் இறுதி கணக்கறிக்கையில் 10வது இலக்கப் பக்கம்)

(எ) குறிப்பிட்ட வாகனங்களின் உண்மையான விலைகளை கண்டறிவதில் காணப்பட்ட அசௌகரியங்களினால் அவற்றை எதிர்வரும் நாட்களில் திருத்தும் அடிப்படையில் "Work in progress" கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த பெறுமதி மோட்டார் வாகன கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தயவுசெய்து அறிவிக்கின்றேன்.
(பேரேட்டுப் பக்கம் 07 மற்றும் இல. 05)

2.3.8. முற்பணங்களை வழங்குதலும் அவற்றை தீர்த்துவைத்தலும்.

முன் ஆயத்த நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்காக முற்பணம் வழங்கப்பட்ட போதிலும் மீளாய்வு ஆண்டினுள் குறிப்பிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட பலதரப்பட்ட அனர்த்தங்களின் காரணமாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதனால் முன் ஆயத்த நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியவில்லை. அவ்வாறு முன் ஆயத்த நடவடிக்கைகள் பின்போடப்பட்டதன் காரணமாக பற்றுச்சீட்டுக்களுக்கான கட்டணங்கள் செலுத்தப்படுவது தாமதமடைந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் பற்றுச்சீட்டுக்கள் இறுதியாக மாவட்டச் செயலாளர்கள் அல்லது கணக்காளர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்பதனால் குறிப்பிட்ட மாவட்ட செயலகங்களில் ஏற்படும் தாமதங்கள் காரணமாக சில முற்பணங்களை தீர்த்துவைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதுடன் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்து பற்றுச்சீட்டுக்கள் கிடைத்தன் பின்னர் முற்பணம் செலுத்தி முற்பணம் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதாக தயவு கூர்ந்து அறிவிக்கின்றேன்.

2.3.9. பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஏதேனும் விசேட சந்தர்ப்பங்களில் பலதரப்பட்ட நிறுவனங்கள் இவ்வாறான துண்டுப் பிரசுரங்களை எம்மிடம் கேட்கின்றார்கள் அதனால் ஒரு தொகை கையிருப்பில் உள்ளது.

3.1. நிதி மீளாய்வு

3.1.1. நிதி விளைவுகள்

இது ஓர் குறைபாடு அல்ல சொத்துக்களை தேய்மான கணிப்பீடு செய்யும் நிலைமையை இது காட்டுகின்றது.

3.1.2. உள்ளக

உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கவில்லை என்பதுடன் இதனால் அந்தபதவிக்கான நியமனத்தை செய்ய முடியவில்லை. தற்போது அனர்த்த முகாமைத்துவ நியமனத்தை மீள ஒழுங்கமைக்கும் திட்டத்தின் கீழ் மேற்கூறிய பதவிக்கான ஆட்சேர்ப்பினை செய்வதற்கான அனுமதி கிடைத்துள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் உள்ளக கணக்காய்வின் தேவைக்கமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் அனுமதிக்கமைய வெளிவாரி கணக்காய்வு நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் அதன் பிரதியொன்றை இத்தால் அனுப்பிவைக் கின்றேன்.

04. கூட்டமைப்பு கட்டுப்பாடு

(அ) கணக்கீட்டு குறைபாடுகள்

நிலவும் குறைபாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி எதிர்வரும் நாட்களில் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) அனர்த்தங்களை குறைப்பதற்கான கருத்திட்டம்

அனர்த்தங்களை குறைத்தல் தொடர்பாக நிலவும் சில தெளிவற்ற நிலைமைகள் சம்பந்தமாக எம்மால் ஆராயப்பட்டுள்ளளதுடன் அவற்றில் நிலவும் குறைபாடுகளை கண்டறிந்து அவை தொடர்பாக விசேட கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) உள்ளக கணக்காய்வு

இந்த நிறுவனத்தை மறுசீரமைக்கும் யோசனைகளின் கீழ் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரொருவரை சேர்த்துக்கொள்ள முகாமைத்துவ சேவைகள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பிட்ட வெற்றிடங்கள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இந்த குறைபாடுகளை களையமுடியும்.

மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டிஆரச்சி
(இளைப்பாறிய)
பணிப்பாளர் நாயகம்

**සහභාගි වූ නිලධාරීන්**

ලලිත් වීරතුංග මහතා , ජනාධිපති ලේකම් , ජනාධිපති ලේකම් කාර්යාලය
ආචාර්ය පී.බී. ජයසුන්දර මහතා ලේකම් මුදල් අමාත්‍යාංශය
එස්.එම්. මොහොමඩ් මිය, ලේකම්, ලේකම්ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය / ලේකම් ව්‍ය.ක.ජා.ස
මේජර් ජෙනරාල් ගාමිණී හෙට්ටිආරච්චි මහතා අධ්‍යක්ෂ ජනරාල්, ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
බැසිල් ප්‍රනාන්දු මහතා, අධ්‍යක්ෂ ජනරාල්, ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය
බී.එම්.එස්. බටගොඩ මහතා , අධ්‍යක්ෂ ජනරාල්, ජාතික සැලසුම් දෙපාර්තමේන්තුව
එච්.එම්. පලන්සූරිය මහතා, ප්‍රධාන ගණකාධිකාරි ,ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය
ඒ ලක්කදාස් මහතා , ජ්‍යෙෂ්ඨ සහකාර ලේකම් ,ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය
ලලිත් චන්ද්‍රපාල මහතා ,අධ්‍යක්ෂ, කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
යූ. ඩබ්.එල් චන්ද්‍රදාස මහතා, අධ්‍යක්ෂ ,ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
බ්‍රිගේඩියර් එන්. බී. වේරගම මහතා, අධ්‍යක්ෂ, ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
ආර්.එම්.එස්. බණ්ඩාර මහතා, අංශ ප්‍රධානී - නායයෑම් අධ්‍යන අංශය ,ජාතික ගොඩනැගිලි පර්යේෂණ සංවිධානය
වී.එස්. හෙට්ටිආරච්චි මහතා , පරිපාලන නිලධාරී , ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
පුෂ්පිකා නිලන්ති මෙනවිය , සංවර්ධන සහකාර , ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය

පහත දැක්වෙන කරුණු සභාවේ සාකච්ඡාවට ගැනිණි.

**න්‍යාය පත්‍ර අංක 1**
**පසුගිය සභාවේ සාකච්ඡා සටහන් සම්මත කිරීම**

වර්ෂ 2009 මාර්තු මස 13 දින පැවැති ජාතික ව්‍යසන කළමනාකරණ සභාවේ සාකච්ඡා සටහන් සම්මත විය.

**න්‍යාය පත්‍ර අංක 2**
**ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානයේ අධ්‍යක්ෂක ජෙනරාල් ගේ වාර්තාව**

ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානයේ අධ්‍යක්ෂක ජෙනරාල්, මේජර් ජනරාල් ගාමිණී හෙට්ටි ආරච්චි මහතා විසින් 2009 සහ 2010 වර්ෂ වලට අදාලව මධ්‍යස්ථානය මගින් ඉටුකරන ලද කාර්යයන් පිළිබදව වාර්තාවක් ඉදිරිපත් කරන ලදී. ඒ අනුව අදාල කාලසීමාව තුළ ඉටු කරන ලද කාර්ය භාරය සභාවේ ඇගයීමට ලක් විය.

අතිගරු ජනාධිපතිතුමා විසින් රියදුරු බලපත්‍රය නිකුත් කිරීමට පෙර රියදුරන් සදහා ප්‍රථමාදාර සහ ආරක්ෂිත රථවාහන ධාවනය පිළිබද පුහුණුව ලබාතිබීම අනිවාර්ය කිරීමේ වැදගත් කම අවධාරණය කල අතර ඒ සදහා ක්‍රම වේදයක් සකස් කිරීම සදහා අවශ්‍ය පියවර ගැනීමටද උපදෙස් දෙන ලදී.

ආපදා බහුල ප්‍රදේශවල පාසල් සිසුන්ට ආපදා කළමනාකරණය පිළිබද දැනුවත්භාවය ලබා දීම සදහා පාරිසරික කව සරහා දැනුවත් කිරීමේ පත්‍රිකා සහ සටහන් අදාල පාසල්වලට ලබාදීමේ ඇති වැදගත්කම ගරු අධ්‍යාපන අමාත්‍යතුමා විසින් පෙන්වා දෙන ලදුව ඒ සම්බන්ධයෙන්ද සාකච්ඡා කරන ලදී.

**න්‍යාය පත්‍ර අංක 3**

**පසුගිය සාකච්ඡා සටහන් තුළින් පැන නගින ගැටළු**

**3.1 සභා පත්‍රිකා අංක 04/03.1/2010-**
**2005 අංක 13 දරන ආපදා කළමනාකරණ පනත සංශෝධනය කිරීම**

සභාවට ඉදිරිපත් කරන ලද සංශෝධිත ආපදා කළමනාකරණ පනත පිළිබදව සාකච්ඡා කරන ලද අතර පහත සදහන් සංශෝධන ඇතුලත් කිරීම සදහා තීරණය කරන ලදී.

இணைப்பு - 02

2011/14

DMC 0360

දිනය / Date 03/03/2011

...ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය

...SASTER MANAGEMENT CENTRE

මුදල් භාරගැනීමේ කුවිතාන්සිය

**CASH RECEIPT**

...ලද අය / ...d from : H.M.N.P. Bandara

...මුදල / ...ount Received : රුපියල් /The Sum of rupees Twelve Thousand One Fifty Five

ශත / Cents Twenty Five only.

...Reason : Repayment of Warm Clothe ...ance

...ංකය / Cheque No.:

12,155/25 ✓

අත්සන හා තනතුර

Signature & Designation

ඇමුණුම 4 - 03

දිනය :- 2011-06-20

ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානයේ කාර්ය මණ්ඩලය නව ප්‍රතිව්‍යුහගතකරණ යෝජනාවෙහි සඳහන් තනතුරු වලට පත් කිරීමේදී පහත නම් සඳහන් අය ඔවුන්ගේ නම් ඉදිරියෙන් සඳහන් සේවා ස්ථානවලට අනුයුක්ත කිරීමට තීරණය කරන ලදී.

| | නම | අනුයුක්ත කිරීමට නියමිත සේවා ස්ථානය |
|---|---|---|
| 01 | ඩී.එස්. මොරමුදලි මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -පුත්තලම |
| 02 | එච්. දයාරත්න මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -පුත්තලම |
| 03 | ඒ.ඒ.එස්. අහමඩ් මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -මන්නාරම |
| 04 | ඩබ්.ඒ.ඒ.එස්. ගුණසිංහ මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -අම්පාර |
| 05 | එල්.එච්. රොෂාන් රංගන පීරිස් මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -අම්පාර |
| 06 | එම්.ඩී. සිරිත් තිලක් මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -ත්‍රිකුණාමලය |
| 07 | බී.එච්.ආර්.පී පෙරේරා මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය - මොනරාගල |
| 08 | කේ.ඒ.ඩී.ආර්. කුසුම්සිරි මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -ත්‍රිකුණාමලය |
| 09 | එච්.ඩබ්.එන්. ප්‍රියංගිකා මිය | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -කොළඹ |
| 10 | එම්.ජී.අයි. පෙරේරා මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -කුරුණෑගල |

| | | |
|---|---|---|
| 11 | එච්.එස්. ලියනගේ මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -~~රත්නපුර~~ අනුරාධපුර |
| 12 | එච්.පී. ලියනගේ මහතා. | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -මඩකලපුව |
| 13 | ආර්.පී. රාජ් නිශාන්ත මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -රත්නපුර |
| 14 | ඒ.ඩී. නිශාන්ත මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -අම්පාර |
| 15 | කේ. රත්නසිරි මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -මුලතිව් |
| 16 | එස්.හපුආරච්චි මහතා | ආපදා කළමණාකරණ මධ්‍යස්ථානය - හදිසි මෙහෙයුම් මැදිරිය |
| 17 | යු.අයි.පී.එල්. බණ්ඩාර මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -කෑගල්ල |
| 18 | එච්.එම්.එම්. කුඩාබණ්ඩා මහතා | දිස්ත්‍රික් ආපදා කළමනාකරණ සම්බන්ධීකරණ ඒකකය -මාතලේ |

02. ඒ අනුව අදාළ පත් ලිපි නිකුත් කිරීමේදී උක්ත සේවා ස්ථාන වලට අනුයුක්ත කළ යුතුය.

1. මේජර් ජෙනරාල් ගාමිණී හෙට්ටිආරච්චි( විශ්‍රාමික) .................................
   අධ්‍යක්ෂ ජනරාල්
2. යු.ඩබ්.එල්. චන්ද්‍රදාස .................................
   අධ්‍යක්ෂ(තාක්ෂණ හා අවම කිරීම්)
3. බ්‍රිගේඩියර් එන්.බී. වෙරගම .................................
   අධ්‍යක්ෂ(හදිසි මෙහෙයුම්)
4. වී.එස්. හෙට්ටිආරච්චි .................................
   පරිපාලන නිලධාරි

# Abbreviations

| | | |
|---|---|---|
| ADPS | - | Asian Disaster Preparedness Centre |
| AGA | - | Assistant Government Agent |
| BOI | - | Board of Investment |
| DM | - | Disaster Management |
| DMC | - | Disaster Management Centre |
| DDMC | - | District Disaster Management Centre |
| DDMCU | - | District Disaster Management Coordinating Unit |
| DRR | - | Disaster Risk Reduction |
| DVI | - | Disaster Victim Reduction |
| EOC | - | Emergency Operation Centre |
| EWS | - | Early Warning System |
| FRD | - | Fund for Relief and Development |
| GTZ | - | Germen Technical Cooperation |
| GA | - | Government Agent |
| ICS | - | Incidental Command System |
| INGO | - | International Non Government Organizations |
| JICA | - | Japan International Cooperation Agency |
| M / DM & HR | - | Ministry of Disaster Management & Human Rights |
| NCDM | - | National Council for Disaster management |
| NGOs | - | Non Government Organizations |
| NBRO | - | National Building Research Organization |
| NIE | - | National Institute of Education |
| UNDP | - | United nations Development Program |
| USAID | - | United States Agency for International Development |
| UNESCAP | - | United Nations Economic and Social Commission for Asia and the Pacific |
| UNVs | - | United Nation Volunteers |
| SLDRN | - | Sri Lanka Disaster Resource Network |
| SLLRDC | `- | Sri Lanka Land Reclamation and Development |
| TOT | - | Training of Trainers |
| UNOCHA | - | United Nation Office for the Coordination of Humanitarian Affairs |